24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 | கதிர் 97 | மாசி 20ஆம் நாள் | திங்கட்கிழமை | 04 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## சிவராத்திரிக்கு முதல்நாள் அசம்பாவிதம்

# திருக்கேதீஸ்வர ஆலய அலங்கார வளைவு கத்தோலிக்க மக்களால் இடித்தழிப்பு

## மன்னாரில் மதப் பதற்றம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது





மன்னார், மார்ச் 4

இந்து மக்களால் மகாசிவராத்திரி விரதம் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில், இந்து மக்களின் மிக முக்கிய வழிபாட்டுத் தலமாகவும், ஈழத்தில் பாடல்பெற்ற தலமாகவும் உள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் செல்லும் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த வளைவு நேற்று இடித்தழிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மற்றும் வேறிடங்களிலிருந்து வந்த கத்தோலிக்க மக்களால் இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டதாக மன்னார் மாவட்ட குரு முதல்வர் விக்டர் சூசை தெரிவித்தார்.

>> 25

### மூன்றரைக் கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 4

மூன்றரைக் கிலோ கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் இன்னுமொருவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளை, இத்தாவில் பகுதியில் கஞ்சாக் கடத்தல் இடம்பெறுவதாக சிறப்பு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அந்தப் பகுதிக்குச் சாதாரண உடையில் சென்ற சிறப்பு அதிரடிப் படையினர், சந்தேகத்துக்கு இடமாகச் சென்ற உந்துருளியை மறித்துள்ளனர். ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். மற்றையவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து மூன்றரைக் கிலோ கஞ்சாவை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஓ.5,6)

### சட்டத்துக்குப் புறம்பான விகாரைகளை கத்தோலிக்கர் இடித்தழிக்காதது ஏன்?

#### இந்து மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்

மன்னார், மார்ச் 4

சட்டத்துக்குப் புறம்பாக அமைக்கப்பட்டது என்று தெரிவித்து வளைவை அகற்றுவதாகக் கூறும் கிறிஸ்தவ மக்கள், சட்டத்துக்குப் புறம்பான விகாரைகள், புத்தர்சிலைகளை இடித்தழிக்காதது ஏன்? இவ்வாறு இந்து மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஈழத்தில் பாடல்பெற்ற

>> 25

### சிவராத்திரி முடியும் வரை வளைவு அமைக்க அனுமதிக்க வேண்டாம்

#### பொலிஸிடம் கோரியுள்ளோம் என்கிறார் மன்னார் குருமுதல்வர் விக்டர் சூசை

மன்னார், மார்ச் 4

சிவராத்திரி முடியும் வரையில் நிரந்தர வளைவு அமைப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் என்று பொலிஸாரிடம் கோரியுள்ளோம். சிவராத்திரி முடிந்த பின்னர் இரண்டு தரப்புக்களும் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். இவ்

>> 25

### திருப்பதியில் ரணில் வழிபாடு



யாழ்ப்பாணம், மார்ச் 4

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வழிபாடு நடத்தினார். அவர் தனது எடைக்குச் சமனாக ஆலயத்துக்கு ஐம்பொன் வழங்கினார்.

கொழும்பிலிருந்து சென்னை வானூர்தி நிலையத்தை சென்றடைந்த ரணில் விக்

>> 25

### மன்னார் சர்வமதப் பேரவையிலிருந்து இந்துக் குருமார் வெளியேறுகின்றனர்

மன்னார், மார்ச் 4

மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையிலிருந்து மன்னார் மாவட்ட இந்துக் குருமார்கள் வெளியேறுவதாக, மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவைத் தலைவர் சிவசிறீ மகா தர்மகுமார குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வீதியில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வளைவு கிறிஸ்தவ மக்களால்பிடுங்கப்பட்டு

>> 25

### இலுப்பைக்கடவை விபத்து ஒருவர் பரிதாப உயிரிழப்பு

மன்னார், மார்ச் 4

மன்னார் இலுப்பைக்கடவைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.50 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த அன்ரனி யேசுதாஸ் (வயது-51) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இலுப்பைக்கடவை பிரதான வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவரை பின்னால் வந்த

>> 25

### நீதிகோரி மக்கள் எழுச்சிப் போராட்டம்

#### மாணவர் ஒன்றியம் அறைகூவல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 16ஆம் திகதி மக்கள் எழுச்சிப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்

>> 25

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
04 . 04 . 1957



ஆண்டவன் அடியில்
15 . 03 . 2018

## திருமதி அருந்திராதேவி (சித்திரா) சிவசுப்பிரமணியம்

ஆண்டு ஒன்று ஆகியே சென்றதம்மா
ஆனாலும் உம் நினைவு அகலவே இல்லையம்மா
வாழ்ந்த நாளில் எமை வாஞ்சையுடன் சீராட்டி
வாழ்க்கைக் கல்விதனை வளமாகக் கற்றுத் தந்தீர்
ஆண்டவனும் உம்மை விரும்பியே அழைத்தானோ?
மீளாத்துயரில் தவிக்கின்றோம் துடிக்கின்றோம்

அன்னாரின் இல்லத்தில் இன்று (04.03.2019) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(CS/23725) (11.17)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி (ராசாத்தி) சண்முகம்

கல்லூரி வீதி சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சண்முகம் 02.03.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சீதேவி தம்பதியரின் அன்பு மருமகளும், கலாநிதி, சதாநிதி, தயாநிதி, சுகுணநிதி, குணசேகரம் (பிரான்ஸ்), கருணாநிதி (சுவிஸ்), சந்திரசேகரம் (லண்டன்), சுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், விசுவலிங்கம், முத்துலிங்கம், கணபதிப்பிள்ளை, தயாநிதி (பிரான்ஸ்), சுகந்தினி (லண்டன்), அகிலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், லீலாவதி, தர்மபூபதி, ராஜபூபதி, சற்குணவதி, சிவபாக்கியம், மனோரஞ்சிதபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகந்தினி - பிரதீபன், நாகரூபன் - கஸ்தூரி (லண்டன்), நாகவரதன் - துவாரகா, மயூரன், ரமேஸ் - நேருஸா, சஜிலா - சிவகுமார் (பிரான்ஸ்), வினோஜா, பிரியா, குவேந்தினி, தயந்தன், அனுசா, கரன், விதூசன், விஜிந்தன், அட்சயா, அதிஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரதிஸ்ரா, தஸ்வின், தரணியா, இனியா, டினுஷியா, ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 636 5748

(cs.00424) (13.17)

# மரண அறிவித்தல்

## சின்னையா கணேசலிங்கம் (இணுவில் மேற்கு)

*(ஓய்வு பெற்ற பிரதம தபாலதிபர்)*



பிறப்பு
24.01.1936

இறப்பு
02.03.2019

யாழ். இணுவில் வட்டுவினியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கணேசலிங்கம் 02.03.2019 சனிக்கிழமை கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - உலகாத்தைப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகனும் யெகபூபதியின் அன்புக் கணவரும் பிரபாகரன்(கனடா), சுதாகரன்(லண்டன்), திவாகரன்(லண்டன்), அரவிந்தன்(கனடா), ஜனனி(லண்டன்), தினேஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மணிவதனா(கனடா), நிரஞ் ஜனி (லண்டன்), மீரா(லண்டன்), அருந்ததி(கனடா), மனோதீரன்(லண்டன்), பிரதீபா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இராசலெட்சுமி, தியாகராசா, பஞ்சலிங்கம், கணேஸ்வரி மற்றும் சிதம்பரநாதன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, இராசமணி, புனிதவதி, நட ராசா மற்றும் ஜெகதாம்பாள்(கனடா), வாமதேவா(கனடா), பரமேஸ்வரன்(இலங்கை), சர்வேஸ்வரன்(இலங்கை), இரஞ்சிதபூபதி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத் துனரும், லலிதா(கனடா),ஶ்ரீரஞ்சினி (இலங்கை), புஷ்பராணி(இலங்கை), இராச வரோதயம்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும், Deshna, Dhirhan, Darun, JathushaaJoyshtna, Kiran, Kashvi, Aarany, Aran, Tarren, Lavenya, Myren, Thayash ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Saturday - 09 Mar 2019 5:00 PM - 9:00 PM, Sunday - 10 Mar 2019 8:00 AM - 9:30 AM வரை Chapel Ridge Funeral Home & Cremation Cen tre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் அஞ்சலிக்காக வைக் கப்பட்டு பின்னர் Sunday- 10 Mar 2019 9:30 AM - 11:30 AM மணி வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 12:00 PM - 12:30 PM மணியள வில் Highland Hills, 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada இல் தக னம் செய்யப்படும்.

அன்றைய தினம் (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் வட்டுவினி, இணு வில் மேற்கு, இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஸ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

(CS 23745)(14,17)

தகவல்: குடும்பத்தினர்.

077 644 7386 (இணுவில்)

## யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

எதிர்வரும் 2019.03.05 ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி எமது பாட சாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் 2019.03.06 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும் என்பதையும் மாணவர்கள் அனைவரும் காலை 7.00 மணிக்குப் பிந்தாமல் வருகை தருவதுடன் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**அதிபர் - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.**




## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 16 . 04 . 1936



உதிர்வு 02 . 02 . 2019

### திருமதி பரமேஸ்வரி தர்மராசா (ஆச்சிப்பிள்ளை)
**(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)**

கடந்த 02.02.2019 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பரமேஸ்வரி தர்மராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.03.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**94, பழம் வீதி,**
**கந்தர்மடம், ஆலடிச்சந்தி**

(CS/21383)(11,17)

**குடும்பத்தினர்.**

### விற்பனைக்குண்டு

பாவித்த கண்ணாடி அலுமாரி, குளிர்சாதனப் பெட்டி 01, கபேட் (சுவரில் பொருத்துவது) விற் பனைக்குண்டு.

(cs 23747)(11.17)

**077 422 1117, 077 978 7976**

### குறைந்தவிலை காணி விற்பனைக்கு

**(Farm, Yard க்கு பொருத்தமானது)**

உரும்பிராய் சந்திக்கும் இராஜ வீதி சந்தி (கோப்பாய்) க்கும் இடையில் பாரதி கடைக்கு அண்மையில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**-076 332 4436**

## நூற்றாண்டு தூபி அமைப்பதற்கான ஆட்சேபனை தொடர்பானது

மாம்பழம் சந்திக்கு அருகிலுள்ள சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு வழங்கப்பட்ட இல: 62, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள காணியில் A9 வீதியின் மத்தியில் இருந்து 30 அடிகளுக்கு அப்பால் நூற்றாண்டு தூபி ஒன்றை அமைப்பதற்கு தலைவர், அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டம் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கு வது தொடர்பான ஆட்சேபனை ஏதும் இருப்பின் இரண்டு வார காலத்துக்குள் **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவித்தலை வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(O9530)(11,17)

## 31ஆம் நாள் நினைவும், நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 05.02.2019 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் திருமதி அன்னலட்சுமி கணேசன் (பேபி அக்கா)



தோற்றம் 22.02.1936 — மறைவு 05.02.2019

அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும், தொலை பேசி, மின்னஞ்சல் மற்றும் முகநூல் மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உதவிகளை நல்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (05.03.2019) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையி லும் வீட்டுக்கிருத்தியக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 07.03.2019 வியாழக்கிழமை காலை எமது இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு முற்பகல் 11.30 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள "தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் (TCT)" இடம் பெறும். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**131/4 இராசாவின் தோட்டம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 6537**

(CS 23742)(14.17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி நிர்மலா தியாகராஜா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட செல்வி நிர்மலா தியாகராஜா கடந்த 27.02.2019 புதன்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா (ஓய்வு பெற்ற கச்சேரி உத்தியோகத்தர்) மற்றும் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், வத்சலா (நோர்வே), சுதாகர் (லண்டன்), சசிகலா (நோர்வே), சியாமளா (நோர்வே) ஆகியோரின் அன்பு சகோதரியும், பிரான்சிஸ் கயூதம்பிள்ளை (நோர்வே), விஷாந்தினி (லண்டன்), உதயகுமார் (நோர்வே), சுரேஸ் குமார் (நோர்வே) ஆகியோரின் மைத்துனி யும், நிரோசாவின் சிறிய தாயாரும், டிலக்சன், வர்ஷா, சிந்துஜா ஆகியோரின் பெரிய தாயா ரும், காலஞ்சென்ற S.S.சண்முகநாதன் (ஓய்வு பெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர்) மற்றும் தியாகராசா (ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்), செல்வராசா (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்), சோதிராசா (பிரான்ஸ்), சத்தியசீலன் ஆகியோரின் மருமகளும், மாணிக்கவாசகர் (லண்டன்), செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற கொமர்சல் வங்கி உத்தியோகத்தர்), பாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No. 113, சந்தனமாதா ஒழுங்கை,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

(CS/23743)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

13 வருடங்களுக்குப் பிறகு

# தனுஷுடன் நடிக்கும் சினேகா



புதுப்பேட்டை திரைப்படத்துக்குப் பிறகு தனுஷ் இரட்டை வேடத்தில் நடிக்கும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை சினேகா நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. தற்போது வெற்றிமாறன் இயக்கும் அசுரன் திரைப் படத்தில் தனுஷ் நடித்து வருகிறார். அசுரன் படத்தை அடுத்து கொடி பட இயக்குநர் துரை செந்தில்குமாருடன் கைகோர்க்கிறார் தனுஷ். இந்தப் படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்தின் படப்பிடிப்பு பணிகள் இந்த மாதம் துவங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. மகன், தந்தை என்ற இரண்டு கதாபாத்திரங்களில் தனுஷ் நடிக்கிறார். அதில் தந்தை கதாபாத்திரத்தில் நடிக்கும் தனுஷுக்கு ஜோடியாக நடிக்க நடிகை சினேகா ஒப்பந்தமாகியுள்ளார். புதுப்பேட்டை படம் வெளியாகி 13 ஆண்டுகள் ஆகும் நிலையில் இந்த ஜோடி மீண்டும் இணைந்து நடிக்க உள்ளது.

## மரண அறிவித்தல்

### Dr. சுப்பையா மகேஸ்வரன்



மண்ணில் 07.01.1937 விண்ணில் 03.03.2019

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சுப்பையா மகேஸ்வரன் நேற்று (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திரிசதிதேவியின் அன்பு கணவரும் மாலாரமணி (அவுஸ்ரேலியா), சாந்தாரமணி (அவுஸ்ரேலியா), பாலறமணா (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மணிசேகரன்(அவுஸ்ரேலியா), பிரபாகர்(அவுஸ்ரேலியா), கோகிலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சரண்யா, கௌசல்யா, சஞ்சீவன், அபிநயா, பூங்குழலி, முகிலன் ஆகியோரின் செல்லத்தாத்தாவும் வசந்தா தேவி (லண்டன்), காலஞ்சென்ற மனோகரன், மற்றும் சிறீகரன், கருணாகரன் (அவுஸ்ரேலியா), குணாகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, மற்றும் யோகேஸ்வரி, ராஜேஸ்வரி காலஞ்சென்ற லலிதாடில்குஷி, மற்றும் சுபாசினி காலஞ்சென்ற நிர்மல்ராஜ், மற்றும் யுவராஜ் (கனடா), சுவர்ணராஜ், நிருபாமதேவி (லண்டன்), சுசீலாதேவி, சிவராஜ் (கனடா), கமலாதேவி (லண்டன்), கலாவதிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை முதல் 45, மகாத்மா வீதி நெல்லியடியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 06.03.2019 புதன்கிழமை 45, மகாத்மா வீதி நெல்லியடியில் அமைந்துள்ள இல்லத்தில் மு.ப. 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**45, மகாத்மா வீதி,**
**நெல்லியடி, கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து அருளம்பலம்



நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அருளம்பலம் 02.03.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், சீதாதேவியின் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேல், குமரகுருபரன், பாக்கியம், மனோன்மணி மற்றும் பூபதி ஆகியோரின் சகோதரரும், சுதர்சினி, சுதர்சன், சுதாகரன், சுகிர்தரன், சுஜீவன், சுதாதீபன், தயாளினி ஆகியோரின் தந்தையும், ஸ்டில்மன்பயஸ், நிர்மலா, மாலினி, நிஷாந்தி, இளங்கேஸ்வரி ஆகியோரின் மாமனும், அட்ரியானா, அபிவர்மன், தஸ்விகன், அஸ்விகன், பிரதாஞ்சன், ரிக்ஸ்சிகா, ஹரிணி, சஜீவ், யஷஸ்வி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாயன்மார் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**071 693 3601, 077 616 7344**

## மரண அறிவித்தல்

### முருகேசு சரவணமுத்து



உசனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சரவணமுத்து கடந்த (02.03.2019) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை, கணேஸ் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற காமாட்சி, நவமணி ஆகியோரின் மைத்துனரும் சாந்தலக்குமி (இலங்கை), சிறிகாந்தன் (இத்தாலி), நந்தலக்குமி (இலங்கை), தனலக்குமி (ஆசிரியை - யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை), பத்மகாந்தன் (கனடா), ஜீவகாந்தன் (இத்தாலி), முருகானந்தன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை (இளைப்பாறிய போமன் இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனம்), சந்திராதேவி (இலங்கை), காலஞ்சென்ற ஞானதேவி, சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை தபால் அதிபர் இலங்கை), யோகராஜா (ஆசிரியர், யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம்), சிவஜோதி (கனடா), லதா (இத்தாலி), அனுசா (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜசிதலா (அவுஸ்திரேலியா), ராஜாராம் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), ஜதிகேசன் (இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் - சாவகச்சேரி), சரண்ஜா (இலங்கை வங்கி - சாவகச்சேரி), சுஜிதா (இத்தாலி), ராஜிவ் (இத்தாலி), கஜிதா (ஆசிரியை - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), காண்டீபன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி பழையமாணவன்), ரஜீவனா(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலகம், தென்மராட்சி, இலங்கை), கஜரூபன் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலகம்,தென்மராட்சி), தினேஸ் (பொறியியலாளர் ,சிங்கப்பூர்),விதுசன் (மருத்துவபீட இறுதி வருட மாணவன் - யாழ்ப்பாணம்), வேணுஷன் (கனடா), வைஸ்ணவி (மாணவி - யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி), மயூரன் (கனடா), மீனுஷா (கனடா), தணிகேசன் (அவுஸ்திரேலியா), தாரணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், மதுமிதா (அவுஸ்திரேலியா), ஹரிஸ்ராம் (அவுஸ்திரேலியா), அக்ஷிகா (இத்தாலி), அபர்ணிகா (இத்தாலி), அபிஸ்கா (இலங்கை) ,அஸ்நிதா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (05.03.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் பூதவுடல் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| சிறிகாந்தன் | (மகன் - இத்தாலி | 077 354 5415 |
| பத்மகாந்தன் | (மகன் கனடா) | 0778457796 |
| ஜீவகாந்தன் | (மகன் இத்தாலி) | 0763541738 |
| முருகானந்தன் | (மகன் - அவுஸ்ரேலியா) | 0763541738 |
| ஜதிகேசன் | (பேரன் - இலங்கை) | 0776108420 |
| விதுசன் | (பேரன் - இலங்கை) | 0777401076 |
| தினேஸ் | (பேரன் - சிங்கப்பூர்) | 6591495536 |

**தகவல்**
**குடும்பத்தினர்.**

### சின்னத்துரை மனோகரதாஸ் (சித்தப்பா)

**(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குநர், வீதி அபிவிருத்தி திணைக்களம்)**



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மனோகரதாஸ் (சித்தப்பா) நேற்று (03.03.2019) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நவரஞ்சிதமலர் தம்பதிகளின் பாசமிகு மகனும், சிவபதத்தின் அன்புக்கணவரும், யோகராணி, சந்திரதாஸ் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), யோகமலர், புஸ்பதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரதீபா, பிரவீணா (நாவலப்பிட்டி), பிருந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், பிரணவன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முல்லைத்தீவு), பிரபாகரன் (நாவலப்பிட்டி), சிவபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலாஷன், காருண்யா, சதுர்த்திகா, கேஷான், அக்ஷயன், அபிஷ்னா, ஆதிரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2019) திங்கட்கிழமை உடுவிலில் உள்ள அவரது மகளது இல்லத்தில் காலை 9 மணிக்கு கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Church Road,**
**Uduvil.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 340 0560, 077 979 0497**

# பாடசாலை நிகழ்வுகள்



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலையின் பிக்னெல் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் பகுதித் தலைவர் டானியல் அருமைநாயகம் அதிசயதாசன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் பரமசாமி பரணிதரன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான கிண்ணங்களை வழங்கி வைப்பதையும், கல்லூரி முதல்வர் கலாநிதி டானியல் எஸ்.சொலமன் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஜ-50)



வவுனியா, மார்ச் 4

மன்னன்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலையின் முதல்வர் ஜெ.செந்தில்நாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா வடக்குப்பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் தர்மேந்திரா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தனர்களாக மாகாணசபை முன்னாள் உறுப்பினர் தியாகராசா, வவுனியா வடக்குப்பிரதேச சபை உறுப்பினர் தி.விஜீகரன், மன்னகுளம் கிராமஅலுவலர் செல்வி த.அங்கனி வவுனியா வடக்கு வலய ஆசிரிய ஆலோசகர் சுந்தரலிங்கம் நேசக்கரங்கள் அமைப்பின் தலைவர் .சுரேந்திரன், ஆகியோர் கலந்துகொண்டனர். (க-222)

யாழ்ப்பாணம், மார்ச் 4

குடத்தனை கரையூர் றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி பாடசாலை அதிபர் ஆ.வினோதன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கினை மணற்காடு பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய டியூக் வின்சன் முதன்மை விருந்தி ர னரான வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் சிறப்பு விருந்தினரான மருதங்கேணி கோட்ட கல்வி அதிகாரி ச.திரவியராசா பாடசாலை அதிபர் ஆ.வினோதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-160)





## கேட்போர் கூட அடிக்கல் நடும் நிகழ்வும் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வும்

வவுனியா, மார்ச் 4

வவுனியா புளிதறித்த புளியங்குளம் அறபா மகா வித்தியாலயத்தின் "கேட்போர் கூட அடிக்கல் நடும் நிகழ்வும் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வும்" நேற்று பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.புகாரி தலைமையில் நடைபெற்றது.

விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள் குடியேற்றம் மறுவா ழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான், வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீன், வவுனியா கல்விப் பணிமனையின் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-222)



### மழலைகள் விளையாட்டு விழா

கொடிகாமம், மார்ச் 4

நாவற்காடு வாணி முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி தி. கம்சிகா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கொத்தணி தலைவரும், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவருமான க. துரைசிங்கம் , சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி. பிரபாகரன், கரம்பை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ச. அகிலன் , மதிப்புறு விருந்தினர்களாக நாவற்காடு கிராம அலுவலர் ம. அமலதீபன் , கல்வி அலுவலர்கள் இ. மகாலிங்கம் , பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க மேற்பார்வையாளர் சி. ரதிக்குமார், முன்பள்ளி ஆசிரியர்களான வியாஜகுமாரி பாஸ்கரன், தயாளன் கல்பனா , ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-159)



வவுனியா, மார்ச் 4

வவுனியா காத்தார் சின்னக்குளம் அ.த.க.பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் அதிபர் சு.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக காத்தார் சின்னக்குளம் கிராம அலுவலர் க.தர்சன், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உறுப்பினர் யோகராசா , மதிப்புறு விருந்தினர்களாக சமாதான நீதிவான் ந.ரவீந்திரன் , கங்கேஸ்வரி முன்பள்ளி ஆசிரியை திருமதி டட்லி, சமூக சேவையாளர் ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-110)



அளவெட்டி, மார்ச் 4

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அண்மையில் அதிபர் கு.லங்கா பிரதீபன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தகுமார், சிறப்பு விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-36)



கொடிகாமம், மார்ச் 4

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது .

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாஸன், மதிப்புறு விருந்தினர்களாக மீசாலை வடக்கு கிராம அலுவலர் திருமதி சேகர் மயூரதி, பழைய மாணவன் வீ.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ் வெற்றிக் கேடயங்களை விருந்தினர்கள் வழங்கிவைத்தனர். (159)

முல்லைத்தீவு, மார்ச் 4



முல்லைத்தீவு அ.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வன்மை திறனாய்வு போட்டிகள் பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் கு.மகேந்திரன் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு முதல், இரண்டாம் இடங்களைப் பெற்ற இல்லங்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் ஜேசு ரெஜினோல்ட், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பகாந்தன் மற்றும் பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-222)

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவன் அ.ஜெயரட்ணம், சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இ.குணேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.







யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் குடத்தனை கரையூர் றோ.க.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பொற்பதி சென் பீற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் அதிபர் ஆ.வினோதன் தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சிக் கிழக்கு பிரதேசசெயலர் கே.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-70)

# நீடிக்கலாம் வாழ்நாளை...




ஒரு முறை வேடன் ஒருவன் வேட்டையாட காட்டுக்குச் சென்றான். வெகுநேரம் அலைந்து திரிந்தும் ஒரு விலங்கு கூட அவனிடம் சிக்க வில்லை. பொழுதும் நன்றாக இருட்டிவிட்டது.
அப்போது அங்கே புலி ஒன்று வந்துவிட, அதற்கு பயந்து அங்கிருந்த வில்வ மரத்தில் ஏறிக்கொண்டான். அந்த புலி அந்த மரத்தையே சுற்றி சுற்றி வந்தது. மரத்தில் கண் அயர்ந்தால், கீழே விழுந்து புலிக்கு இரையாகிவிடக்கூடும் என்பதால் தூக்கம் வராமல் இருக்க அந்த மரத்தின் இலைகளை கீழே பறித்துப் போட்டுக் கொண்டே இருந்தான்.
அந்த இலைகள் எல்லாம் மரத்தின் அடியில் இருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்து கொண்டிருந்தன. மேலும், அன்றைய தினம் மகா சிவராத்திரி என்பதால் இரவு முழுவதும் சிவபெருமானை கண் விழித்து பூஜித்த பலனையும் தன்னை அறியாமலேயே பெற்றான்.
அதன்காரணமாக, அந்த வேடனுக்கு முக்தி அளித்து மோட்சத்தை அருளினார் சிவபெருமான் என்கிறது புராணக்கதை. மகா சிவராத்திரி அன்று விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப்போகும் என்கிறார்கள்.

# கண்ணாடி



கண்ணாடி என்று பொதுவாகக் குறிப்பிடும்போது இது, சாளரங்கள், போத்தல்கள், மூக்குக் கண்ணாடிகள் போன்றவற்றின் உற்பத்தியில் பயன்படுவதும் கடினத் தன்மை கொண்ட, உடையக்கூடிய, ஒளியை ஊடுசெல்ல விடக் கூடிய, பளிங்குருவற்ற திண்மமுமான பொருளொன்றைக் குறிக்கிறது.
தொழில்நுட்ப அடிப்படையில், கண்ணாடி என்பது குளிர்ந்து பளிங்காகாமல் திண்மமாகிய கனிமப் பொருட் கலவை ஆகும். பெரும்பாலான கண்ணாடிகள் சிலிக்காவை முக்கிய கூறாகவும், கண்ணாடி உருவாக்கியாகவும் கொண்டுள்ளன.
அறிவியல் அடிப்படையில் கண்ணாடி என்பது நெகிழிகள், ரெசின்கள், பிற சிலிக்காவைக் கொண்டிராத பளிங்குருவற்ற திண்மங்கள் போன்ற எல்லாப் பளிங்குருவற்ற திண்மங்களையும் குறிக்கப் பயன்படுவதுண்டு. இது தவிர மரபு வழியான உருக்கும் நுட்பங்கள் தவிர்ந்த வேறு முறைகளையும் கவனத்துக்கு எடுத்துக் கொள்வது உண்டு.
எனினும், கண்ணாடி அறிவியல் கனிம பளிங்குருவற்ற திண்மங்களை மட்டுமே உள்ளடக்குகின்றது. கரிம பளிங்குருவற்ற திண்மங்கள் பல்பகுதிய அறிவியல் துறையுள் அடங்கும்.
கண்ணாடி இன்று பல்வேறு அறிவியல் துறைகளிலும், தொழில் துறைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றது. இதன் ஒளியியல் இயல்புகளும், பிற இயற்பியல் இயல்புகளும் இதனைத் தட்டைக் கண்ணாடி, கொள்கலக் கண்ணாடி, ஒளியியல் மற்றும் ஒளிமின்னனுவியல் சார்ந்த பொருள்கள், சோதனைச்சாலைக் கருவிகள், வெப்பக்காவலிகள், வலிதாக்கல் கண்ணாடி இழைகள், கலைப் பொருள்கள் போன்றவற்றுக்கு உகந்த பொருளாக ஆக்குகின்றது.
இது இன்று ஒரு முக்கியமான கட்டிடப் பொருளாக விளங்குகிறது. கண்ணாடி கிறீஸ்துவுக்கு முன் 4ஆயிரம் ஆண்டுகளிலேயே அறியப்பட்டிருந்ததாகக் கருதப்படினும், கட்டடப் பொருள் என்ற அளவில் இதன் பயன்பாடு 18 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது.
கடந்த நூற்றாண்டிலேயே இது பெருமளவு வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை அடைந்ததெனலாம். கண்ணாடி, இன்றைய கட்டிடங்களில், நவீனத்துவத்தின் பிரதிபலிப்பாக விளங்குகிறது.

# வழிகாட்டுவோம்



# மகா சிவராத்திரி



மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இந்த விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இதன் நோன்பு முறைகளைக் கூறும் நூல் மகா சிவராத்திரி கற்பம் என்னும் சிறிய நூல். சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும்.
நித்திய சிவராத்திரி
மாத சிவராத்திரி
பட்ச சிவராத்திரி
யோக சிவராத்திரி
மகா சிவராத்திரி
ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார் பலர் இந்த சிவராத்தி ரியையும் மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து வருகின்றனர்.
விரதம் கடைப்பிடிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒரு நாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். சிவாலயங்களில் நடைபெறும் நான்கு யாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்பப் பொருள்களைக் கொடுத்து உதவலாம். இந்த விரதத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் "சிவராத்திரி" என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடைய வேண்டும் என்று பிராத்தித்தார் இறைவனும் அவ்வாறே என்று அருள் புரிந்தார். அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான், சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப்பெற்றார்.
சிவராத்திரி விரதம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் சிவபெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும். காரிய வெற்றியும் ஏற்படும். 'சிவாய நம' என்று சிந்தித்திருந்தால் 'அபாயம்' நமக்கு ஏற்படாது.'உபாயம்' நமக்கு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்த புனிதமான நாளில் விரதம் இருந்தால் புண்ணியமும் கூடும். பொருளாதார நிலையும் உயரும். ஒரு நாள் முழுவதும், ஆறு கால பூஜையிலும் சிவனை நினைத்து வழிபட்டு சிவாலயங்களில் சிவன் சன்னதியில் அமர்ந்து சிவன் பெயரை உச்சரித்து வந்தால் ஒரே நாளில் ஓர் ஆண்டிற்கான பலனும் நமக்கு கிடைக்கும். அதனால் தான் "சிவராத்திரி" விரதம் சிறந்த பலனைக் கொடுக்கிறது

# வானம்பாடி



வானம்பாடிகள்(larks)எனப்படுபவைஅலாவுடிடே (Alaudidae) குடும்பத்தைச் சேர்ந்த பேசரின் பறவைகள் ஆகும்.
இவை பல்வேறு வகையான நிலப்பரப்புகளில் காணப்படுகின்றன. ஆனால்பொதுவாகவறண்ட நிலப்பரப்புகளில் காணப்படுகின்றன.
வானம்பாடிகள்நன்றாகவகைப்படுத்தப்பட்டகுடும்பம்ஆகும். இதற்குஅவற்றின்கணுக்கால்அமைப்பும் ஒரு காரணம் ஆகும். இவற்றின் கணுக்காலின் பின்பகுதியில் பல செதில்கள் காணப்படுகின்றன. ஆனால்பெரும்பாலானபாடும்பறவைகளில்கணுக்காலின்பின்புறம்ஒரேதட்டுப்போல்காணப்படுகிறது. பாடும் பறவைகளின் கீழ் குரல்வளையின் நடுவில் உள்ளஎலும்புபோன்றஅமைப்புஇவற்றிற்குக்கிடையாது. வானம்பாடிகள்பெரும்பாலானபறவைகளைக் காட்டிலும் விரிவான சத்தங்களை எழுப்புகின்றன. இதன்காரணமாக இவை இலக்கியங்களிலும், இசையிலும்முக்கிய இடத்தைப்பிடித்துள்ளன. முக்கியமாக வடக்கு ஐரோப்பாவின் ஐரோவாசிய வானம்பாடி மற்றும் தெற்கு ஐரோப்பாவின் கொண்டை வானம்பாடி மற்றும் கேலன்ட்ரா வானம்பாடி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பெரும்பாலான இனங்கள் தரையில் கூடு கட்டுகின்றன,
குறிப்பாககாய்ந்தபுற்களில். எனினும்சில இனங்கள் கூடுக்ளை சிக்கலான அமைப்பிலும் மற்றும் பகுதியளவு குவிந்த வடிவிலும் கட்டுகின்றன.
பலகாலமாக வானம்பாடிகள் சீனாவில் வளர்ப்புப் பிராணிகளாக வளர்க்கப்படுகின்றன. பெய்ஜிங்கில் வானம்பாடிகளுக்கு மற்ற பாடும்பறவைகள் மற்றும் விலங்குகளின் சத்தங்களை எழுப்புவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.



பொய் ஆயின எல்லாம் போயகல வந்தருளும்

# மெய்யான விரதம் மகா சிவராத்திரி!



கே.எஸ்.சிவஞானராஜா

சிவமயமாய் வியாபித்திருக்கும் இந்த உலகம் சீரும் சிறப்பும் பெற்று சித்தியும் பக்தியும் கொண்டுபோரும் தாக்குதலும் பதற்றமும் தணிய ஆன்மிகப் பாதையில் தன்னை ஒப்படைத்திருக்கும் இவ்வேளையில் இந்து மக்களின் முதன்மை விரதமாக மகா சிவராத்திரி விரதம் முக்கியத்துவம் பெறுகிறது.

*"சிவனுக்கு உகந்தது சிவராத்திரி- அவன் தேவிக்கு உகந்தது நவராத்திரி"*

**இலங்கையிலும் இந்தியாவிலும் சிவராத்திக்கு முதன்மை இடம்**

சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் சைவம் ஆகையால் இலங்கையிலும் இந்தியாவிலும் சிவராத்திரி முதன்மையாகக் கொண்டாடப்படுகிறது.

குறிப்பாக ஈழத்துச் சிதம்பரம் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயம், சிலாபம் முனீஸ்வரர் ஆலயம், திருகோணமலை கோணேசர் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீசர் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், காலி சிவன் ஆலயம் ஆகிய எட்டு சிவ ஆலயங்களிலும் ஏனைய சிவ முகூர்த்தமுள்ள சைவ ஆலயங்களிலும் நான்கு சாமம் விழித்திருந்து சிவ நாமங்களை உச்சரித்து சிவப்பேறினை வரமாகக் கொள்வார்கள்.

இராவணன், இராமன் இருவருமே சிவபெருமானை நினைத்து தவமியற்றிய திருத்தலங்களாக திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் என்றும்போற்றப்படுகின்றது. திருக்கேதீஸ்வரத்திலே பாலாவித் தீர்த்தத்தின் கரையிலே சிவபெருமான் திடமாக உறைகின்ற காரணத்தினால் சிவதரிசன மகத்துவம் இவ்வாறு குறிப்பிடுகிறது.

*"காலை தொழ அற்றவினை*
*கட்டகலும் கட்டுச்சி*
*வேலை தொழ இப்பிறப்பில் வெந்துயர்*
*போம் மலையினில்*
*வந்து சிவன்தாளை வந்தித்தால்*
*ஏழ் பிறப்பின்*
*வெந்துயரம் எல்லாம் விடும்"*

மேலும் திருக்கேதீஸ்வரப் புராணத்தில் ஒரு பாடல் இவ்வாறு போற்றப்படுகிறது

*"துகளறுக்கும் இத்தலத்தின் பதிகங்கள்*
*சந்நிதியில் தொழுது போற்றிப்*
*புகழுறவே படித்தாலும் கேட்டாலும்*
*ஒருவருக்குப் போதித்தாலும்*
*மகிழுறவே வரைந்தாலும் பரப்புநரைப்*
*பொருள் தந்து மகிழ்வித்தாலும்*
*மகிதலத்து மன்னருமாய் மறுமையினில்*
*சிவலோகம் மருவுவாரே!"*

எனவே மகா சிவராத்திரி விரதமதை மிகமிக உன்னதமாகப் போற்றி கடைப்பிடிக்கும் ஒரு சிறப்புத் தலம் திருக்கேதீஸ்வரமாகும்.

கர்ணபுரம் பரைக்தையாக ஒரு கதை இன்றும் எமக்குச் சொல்லப்படுகிறது. ஆம்! அது பாடலாகவே பகிரப்படுகிறது. கதை இதுதான்.

*காடு சென்ற வேடனோ நீடு நேரமாகவே*
*கதிகலக்க முற்று நிற்கையில்- மாலை*
*மூடு இருள் கவ்விட வீடு ஏகா நிலையில்*
*முழி பிதுங்கித் தடுமாறிட்டானவன்*
*ஓடுகின்ற புலிகளின் உறுமும் சத்தம் கேட்டிட*
*ஒடுங்கி நடுங்கி*
*மரத்திலேறியே அவன்*
*வீடு போக விடியுமட்டும்*
*வில்வமிலை ஒடித்துமே*
*விழித்திருந்து*
*போட்டதே சிவராத்திரியாம்*

இந்தக் கதைக்கான தாற்பரியம் யாதெனில் வேடன் என்பவன் பக்தன். புலிகளின் வருகை மாயைகள்.

வில்வமரம்- திருவருள். இலை பறித்தல்- குருவருள். பூமியில் போடுதல்- பற்றற்ற நிலை. வில்வமிலை குவிதல்- சிவலிங்க மலையாக உருமாறுதல். எனவே ஒரு பக்தன் இவ்வுலக ஆசையினின்றும் துன்பங்களிலிருந்தும் விடுபடவேண்டுமாயின் திருவருளும் குருவருளும் நிரம்பிய பக்தி மார்க்கத்தினூடாக பற்றற்ற நிலைபேறாகிய சிவப்பேற்றினை அடையலாம். எனவே மன்னார் திருக்கேதீஸ்வரம் சென்று பாலாவியில் தீர்த்தமாடி நான்கு சாம பூஜை ஆராதனைகளில் ஒன்றியிருந்து ஒருமனப்பட்டு பேரானந்தப் பெருவாழ்வு பெறுவதற்கு எம்மை சிவராத்திரியன்று பக்குவப்படுத்துவோமாக. முயற்சிப்போம் எனப் பயணிப்போம்.

> குறிப்பாக ஈழத்துச் சிதம்பரம் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயம், சிலாபம் முனீஸ்வரர் ஆலயம், திருகோணமலை கோணேசர் ஆலயம், ஒட்டுசுட்டான் தான் தோன் றீஸ்வரர் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், காலி சிவன் ஆலயம் ஆகிய எட்டு சிவ ஆலயங்களிலும் ஏனைய சிவ முகூர்த்தமுள்ள சைவ ஆலயங்களிலும் நான்கு சாமம் விழித்திருந்து சிவநாமங்களை உச்சரித்து சிவப்பேறினை வரமாகக் கொள்வார்கள்.


**ஆன்மிகத்தை அரவணைக்கும் சிவராத்திரி**

ஆன்மிகம் சார்ந்த விடயங்களை மட்டும் அனுமதித்து அல்லாத ஜனரஞ்சக விடயங்களை அறவே தவிர்த்து சிவராத்திரி விரதத்தை வரம் பாலிக்கச் செய்வோமாக. பொய்யான பிம்பங்கள் அத்தனையும் பொடிப் பொடியாகட்டும். நாளை நமதாக விரதமிருந்து விழித்திருந்து மண்ணாசை, பொன்னாசை, மதுபோதையில் மூழ்கும் வெறிகொள் ஆசை முற்றாகவே பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து சிவமாக்கும் சிவராத்திரியை அவமாக்காமல் தவமாக்குவோம்.


திருமுறை பாராயணமும் குறிப்பாக சிவபுராணம் பாராயணம் செய்தல் சகல சௌபாக்கியங்களையும் சகல சம்பத்துக்களையும் அள்ளித்தரும் என்பதில் ஐயம் இல்லை. சிவபெருமானைப் பரிந்து இரந்து கேளுங்கள்.

*"பாவம் பல புரிந்தேன் இந்தப்*
*பாரில் பல நாளும்*
*தேவே அவை தீரத் தவம்*
*செய்யும் வகை அறியேன்*
*கூவுங் குயில் மொழியாள் இளங்*
*கொங்கை மகிழ் பங்கா*
*மூவா முதலாய் வந்து அருள்*
*முன்னேச்சரத்தானே"*

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி பெருவிழாவானது காண்போரை மெய்சிலிர்க்க வைப்பதாக அமைகிறது. அவரவர் வசதி கருதி சிவன் ஆலயம் ஒன்றிலே நீங்கள் சிவமயமாகுங்கள்.







## கண்ணீர் அஞ்சலி



பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் உபதலைவரும், பணிப்பாளர் சபை உறுப்பினரும், மாதகல் பரிஷ் கிளைக்குழு உறுப்பினருமாகிய

**அந்தோனிப்பிள்ளை லூயிஸ்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது சங்கம் சார்பாக ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(N 9551) (4.17)

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ சங்கம்
பண்டத்தரிப்பு.

## தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கான நிலங்களை பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் **2019** ஆம் ஆண்டு மகோற்சவ காலப்பகுதியில் (**22.03.2019** தொடக்கம் **15.04.2019** வரை) தற்காலிக வியாபாரம் மேற்கொள்வதற்கான நிலங்கள் பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளது.

**காலம்** :- 10.03.2019 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 9.00 மணி

**இடம்** :- மானிப்பாய் மருதடி விநாயகர்
ஆலய முன்றல்

ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் **ரூபா 500.00** இனை கேள்வி வைப்புப் பணமாகச் செலுத்தி **10.03.2019** ஆம் திகதிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 21.03.2019 ஆம் திகதிக்கு முன்னர் முழுத்தொகையையும் செலுத்தி தமது தேர்வினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**பெறுநர் குழு,**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.**

**குறிப்பு:-** பெறுநர் குழுவின் முன்னனுமதி பெறப்படாத நிறுவனங்கள் எவையும் இவ் ஆலய சுற்றாடலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(IN/9505)(1.17)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 02 |
| 08 | 03 |
| 1928 | 2019 |



**திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை**

யாழ்.இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை கடந்த (02.03.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதிகளின் இரண்டாவது மகளும் இணுவில்தெற்கைச்சேர்ந்தகாலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கனகசபாபதி (ஆசிரியர்), நித்தியானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருவிளங்கத்தின் (சுவிஸ்) பெரியதாயாரும் இராஜலட்சுமி, கௌரிமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான நேசம்மா, சோதியம்மா, பஞ்சலிங்கம் மற்றும் நீலசுலோசனா (தேவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, முத்துப்பிள்ளை, செல்லையாச் சுவாமியார், செல்லப்பா, பொன்னையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் வேணுகாணன் (அவுஸ்திரேலியா), சுபவீணா (ஆயுள்வேத வைத்தியர் - திருகோணமலை), கெங்கா (ஆசிரியர் - வ/சின்ன பூவரசங்குளம்), வித்தியாஹரி (ஆசிரியர் - தி/சண்முக இந்து மகளிர் கல்லூரி - திருகோணமலை) செந்தூரன் (சுவிஸ்), சிந்துஜன் (சுவிஸ்), சிவதீபன் (இ.மி.ச பொறியியலாளர் - திருகோணமலை), விஜிதா (அவுஸ்திரேலியா), ராகுலன் (கொமர்ஷல்வங்கி பிராந்திய காரியாலயம் - வடக்கு), சிந்துஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆரபி, அக் ஷரன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2019) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் (மகன்)
கனகசபாபதி (ஆசிரியர்) 077 729 3747
நித்தியானந்தன் (சுவிஸ்) 0041793731221





# MASSIVE VEHICLES AUCTION SALE



**05th of March**

LOLC VEHICLE FACILITY CENTRE
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 02nd, 03rd & 04th March**

(Please refer the Udayan On 01st of March 2019
For the Full List Of Vehicles)

LOLC FINANCE


**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593
Fax: 081 2224371
Email: schokmankandy@slt.lk

City Office & Showroom
No.6A, Fairfield Gardens, Colombo 8
Tel: 011 2502680, 2585408
Tel/Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com


## அந்தியேட்டி அழைப்பு



**செல்லத்துரை ஐயாத்துரை** (ஆடிய பாதம்)
**யாக்கோபு**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.04.1937 | 03.02.2019 |

கடந்த 03.02.2019 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது தந்தையார் செல்லத்துரை ஐயாத்துரை அவர்களின் 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையிலும் 05.03.2019 நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்த முகவரி : சந்தை குறுக்கு வீதி,
காங்கேசன் துறை.
தற்காலிக முகவரி : துன்னாலை மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.
077 411 8464

## twitter

ஜோக்கர்... @ItsJokker



எதிரியை வீழ்த்த
எல்லோரும் ஒரே
மாதிரியான
ஆயுதங்களை
எடுப்பதில்லை.
சிலருக்கு "புகழ்ச்சி"
என்பதே போதும்.

எனக்கொரு டவுட்டு @Thaadikkaran



டிவியை பார்த்திட்டே
அடுப்பில் பாத்திரத்தை
வைத்துவிட்டதை மறந்து,
மீண்டும் அடிச்சு பிடிச்சு ஓடி
போய் கவனித்து விட்டு
வருவது பெண்களின்
அனிச்சை செயல்..!!

சிதறல்கள் @Mujib989898



அந்த காலம் என
ஆரம்பித்து
இந்த காலம் வரையிலும்
கதை சொல்லும் தாத்தா
பாட்டி கதைகளை
மொபைல் போன்கள்
தடுத்து விட்டன...

## f

"அ" வுக்கு அடுத்து
"ஆ" வருவதேன்?
அரசனும், ஆண்டியாகலாம் என்பதை அறிந்திட!!

"இ" வுக்கு அடுத்து
"ஈ" வருவதேன்?
இருப்பவன், ஈய வேண்டும் என் இயம்பிட!!

"உ" வுக்கு அடுத்து
"ஊ" வருவதேன்?
உழைப்பே ஊக்கம் என உணர்த்திட!!

"எ" வுக்கு அடுத்து
"ஏ" வருவதேன்?
எதையும், ஏன் என்று சிந்தித்துப் பார்க்க!!

"ஐ" மட்டும் ஏதோடும் சேராமல் தனித்து இருப்பதேன்?
அதற்கு நான் ( ஐ ) என்ற அகம்பாவம் இருந்தால்
தனிமை படுத்தப்படுவாய் என்பதனை உணர்த்த!

"ஒ" வுக்கு அடுத்து
"ஓ" வருவதேன்?
ஒற்றுமையே ஓங்கும் என்பதை உணர்த்திட!!!

## விற்பனைக்குண்டு


53 - இலக்கமுடைய செல்மொடல் வானும்,
ரூ ஸ்ரோக் (Two Stork) முச்சக்கரவண்டியும்
விற்பனைக்குண்டு.
**077 844 6089**

(23747) (1.17)

## குறைந்தவிலை காணி விற்பனைக்கு

**(கராஜ், ஸ்ரோருக்கு உகந்தது)**

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அடுத்துள்ள ஐந்து சந்தியில் கிழக்குப் பக்கமாக உள்ள 3ஆம் குறுக்கு வீதியில் அம்மன் கோவிலுக்கு பக்கமாக 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. **-076 332 4436**



சிவ சிவ

"தொண்டர் நாள் தொறும் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே"

# திருக்கேதீச்சர ஆலயத்தில்

# மகா சிவராத்திரிப் பெருவிழா

**விளம்பி வருடம் மாசித்திங்கள் 20 ஆம் நாள் (04.03.2019) திங்கட்கிழமை திருக்குடத் திருமுழுக்கு (அபிடேகம்), பூசை, அர்ச்சனை நிகழ்வுகளும் அலங்கார மண்டப சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.**

| | | |
|---|---|---|
| **04.03.2019** | காலை 05.00 மணி | திருவனந்தல் பூசை |
| | 06.00 மணி | கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| | 07.35 மணி | காலைப்பூசை |
| | 10.00 மணி | கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| **மதியம்** | 12.00 மணி | உச்சிக்காலப்பூசை |
| | 2.00 மணி | திருக்கதவடைத்தல் |
| **பிற்பகல்** | 03.00 மணி | கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| **மாலை** | 04.30 மணி | மகா பிரதோஷகால பூசை |
| | 05.00 மணி | மாலைப்பூசை |
| **முன்னிரவு** | 06.00 மணி | முதலாம் சாமக் கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| | 08.00 மணி | முதலாம் சாமப் பூசை |
| | 09.00 மணி | இரண்டாம் யாமக் கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| | 10.30 மணி | இரண்டாம் சாமப் பூசை |
| | 11.00 மணி | மூன்றாம் சாமக் கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| **05.03.2019** | நள்ளிரவு 12.15 மணி | இலிங்கோற்பவ பூசை (மூன்றாம் யாமப் பூசை) |
| **பின்னிரவு** | 02.00 மணி | நான்காம் யாமக் கும்பபூசை, ஸ்நபன அபிடேகம் |
| | 03.00 மணி | நான்காம் யாமப்பூசை |
| **அதிகாலை** | 04.00 மணி | திருக்கதவடைத்தல் |
| | 04.15 மணி | திருவனந்தல் பூசை |
| | 04.30 மணி | காலைப்பூசை |
| | 05.30 மணி | வசந்த மண்டப அலங்காரப் பூசை |
| **நண்பகல்** | 12.00 மணி | உச்சிக்காலப்பூசை |

## திருக்கேதீச்சர வரலாறு

திருமூல நாயனாரால் சிவபூமி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கையில் பழமை யும் பெருமையும் உடைய சிவத்தலங்களுள் சிறப்பு வாய்ந்தது திருக்கேதீஸ் வரமாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாய் அமையப்பெற்ற திருத்தலமாகும்.

பெருந்தவமுடையோரான கேது, மாயன், மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் போன்ற தவமுடையோர் தம் குறை தீர்த்து மீண்ட வரலாறு கொண்ட பழமை வாய்ந்தது.

கேது பூசித்த தலமாதலால் கேதீச்சரமாயிற்றென ஆய்வாளர் கூறுவர். இக்கோயில் மாதோட்ட நன்நகரில் அமைந்துள்ளது. அதாவது சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா என்பவர் பிள்ளைப்பேறு இன்றி திருக்கேதீச்சர பாலாவித் தீர்த்தத்தில் நீராடி கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடி பிள்ளைப்பேறு பெற்றார். பின் இத்தலத்தில் வாழத் தலைப்பட்டு அவ்விடத்தைப் பெருநகராக்கினார். துவட்டாவினால் உருவாக்கியமையால் அவ்விடம் துவட்டா எனவும், பெருநகரானபடியால் மாதுவட்டா எனவும் பின் மருவி மாதோட்டம் எனவும் பெயர் பெற்றது.

இத் தலத்திலமைந்த பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோருக்குக் காயாவில் கடனாற் றும் புண்ணியம் கிட்டுமெனவும் நீராடுவோருக்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் இத்தீர்த்தத்தின் மகிமையாகும்.

பழங்குடியினராகிய நாகர் வழிபட்ட தலமாதலால் நாகநாதர் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இது சைவத்தின் தொன்மையை யும் பழமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

தொடர்ச்சி பக்கம் 10



# கௌரி இணை திருக்கேதீச்சர நாதரின் மகா சிவராத்திரி தினம் சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்

**வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன்**

**தலைவர் - இந்து ஆலயங்களின் ஒன்றியம், மன்னார் மாவட்டம்.**

**திருக்கேதீச்சரத்தான் அருள் பெருகிட பிரார்த்திப்போம்**



# மணமகள் நகை மாடம்





நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.

077 938 4143
021 228 3114

# V.T.A கடல் வாணிபம்

**மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.**

இங்கே சகலவிதமான
மீன்பிடி உபகரணங்களையும் மற்றும்
வெளியிணைப்பு இயந்திர உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ளமுடியும்.



**T.P: 077 644 5910, 077 522 7833**

## தொடர்ச்சி வரலாறு

மற்றும் சோழ, பாண்டிய மன்னர்களும் பல திருப்பணிகளை இத் திருக்கோயிலுக்காற்றிய பெருமையும் வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய, நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையும் கொண்ட திருத்தலமாகும்.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமையும் உடையதாகும். அதுமட்டுமன்றி நாவுக்கரசு நாயனாரின் திருத்தாண்டகத்திலும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருப்பது தொன்மைச் சிறப்பிற்குச் சான்றாகும்.

இத் திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்கள் இருந்தமையையும் அவை சிற்பம், கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றலுள்ள கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் இருந்தமையினை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பத்தாம் பதினொராம் நூற்றாண்டில் இக்கோயில் சோழ மன்னர்களால் இராஜராஜேஸ்வர மகா தேவன் கோயில் என அழைக்கப்பட்டது. வெளிநாட்டவர்களான ஒல்லாந்த போர்த்துக்கீசரால் இவ்வாலயம் தகர்க்கப்பட்டு சிற்பங்கள் சிதைவடைந்தன.

அழிவுற்று சிதைவடைந்த இவ்விடத்தை யாழ்ப்பாணத்து விடிவெள்ளி ஆறுமுகநாவலர் வாங்கி சைவ சமயிகளின் பெருமையும் புகழும் நிலைக்க வேண்டுமென ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். அதனை நிறைவேற்ற முயன்றவர்கள் கொழும்பு தம்பையா முதலியார், சுபைதார் வைத்திலிங்கம் , மாத்தளை ஆசைப்பிள்ளை ஆகியோராவார். அதுவும் நிறைவேறாத நிலையில் 1890 இல் அரச அதிபர் மூலமாக நிலம் கோயிலுடைமையாக்கப்பட்டு கோயிலுக்கென ஒரு சபையும் அமைக்கப்பட்டு முதலாவது தலைவராக சிவபாத சுந்தரமும் செயலாளராக சிற்றம்பலமும் இருந்து இச்சபை 10.02.1951 இல் பொது உடமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இச்சபை மூலம் பல பல பெரியார்களின் அருந்தவ முயற்சிகளால் சிறு சிறு கோயில்களாக உருவாகி முதலாவது கும்பாபிஷேகம் 28.06.1903 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இக்கோயிலில் மூலக் கருவறையிலிருந்த சிவலிங்கம் காசியிலிருந்து வருவிக்கப்பட்டதென இராமேச்சர வரலாறு கூறுகின்றது.

1948ஆம் ஆண்டு இத் திருவிடத்தில் சைவப்பெரு மாநாடொன்று கூட்டப்பட்டது. இந்த மாநாட்டைத் தொடர்ந்து பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் ஆலயத்தில் உருவாக்கப்பட்ட சபையே இன்று உலகளாவிய பெருமையுடன் திகழ்கின்ற திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையாகும்.

இந்த திருக்கோயில் 1952இலும் 1960 ஆம் ஆண்டிலும் திருவுருவங்கள் நிறுவப்பட்டு இருமுறை கும்பாபிஷேகம் இடம்பெற்றது. வழிபடவரும் அடியார் நலன்கருதி திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நாதன் சத்திரம், மலேசியா மடம், கதிர்காமர் தொண்டர் மடம், பூநகரி மடம், அடியார்மடம், நீர்ப்பாசன மடம், சிவபூசைமடம், நரசிங்க மடம், மாதுவட்ட மணிமண்டபம், நாவலர்மடம்,அம்மா சத்திரம், மகா சிவராத்திரி மடம், திருப்பதி மடம், கௌரீசர் மடம், திருக்குறிப்புத் தொண்டர் மடம், நகரத்தார் மடம் எனப் பல்வேறு திருமடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு வெகு சிறப்புடன் கும்பாபிஷேகம் நடைபெற்று 1990 வரை நித்திய நைமித்திய பெருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றது. 1990இற்குப் பின்பு பூசையோ பெருவிழாக்களோ நடைபெற முடியாத நிலையிலிருந்து பின்னரும் சிறப்படைந்து இன்று பாலஸ்தாபன நிலையில் இருக்கும் இக்கோயில் சிவலிங்க திருநீராட்டுடன் சிவராத்திரி கொண்டாட இருப்பது யாவரும் அறிந்ததே.

அணு முதல் அண்டசராசரங்கள் வரை வியாபித்திருக்கும் பரம்பொருளின் பாதார விந்தங்களை முதலில் வணங்கு கின்றேன். வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் மூர்த்தி - தலம்- தீர்த்தம் என்னும் முப்பெருஞ் சிறப்புக்களை யும் கொண்டு 2600 ஆண்டுகளுக்கும் மேற்பட்டுச் சைவ மக்களின் புராதன அடையாளமாகவும் திகழ்வது திருக் கேதீச்சரத் திருத்தலமாகும்.

15ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த போர்த்துக்கீசப் பறங்கிகளால் கிறிஸ் தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் திருக்கேதீச்சரத் திருக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டு திருக்கோயிற் கற்களையும் சிற்பங்களையும் கொண்டு கிறிஸ்தவ தேவாலயமொன்றைக் கட்டினர் என்பதும் மறு(றை)க்க முடியாத வரலாற்று வலி. இவ்வாறு தரைமட்டமாக்கப்பட்ட திருக்கேதீச்சர திருக்கோயிலின் வரலாறு இறையருளாலும் 1872 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் அவர்களின் பெரு முயற்சியாலும் மக்களுக்கு வெளிக்கொணரப்பட்டு திருக்கோயில் நிலத்தை மீளப்பெற்றுக் கோயிலை மீளவும் அமைப்பதற் கான முயற்சிகளை தாமே முன்னின்று ஆரம்பித்தனர். ஆனால் நாவலர் பெருமான் இறைவன் திருவடி நிழலை அடைந்து 14 ஆண்டுகளின் பின்பு விஜய வருடம் கார்த்திகை 30ஆம் நாள் 1893, (13-12-1893) அவிட்ட நட்சத்திர நன்னாளில் (ஏலத்தொகை ரூபா 3100/=) இ திருவாளர்

தொடர்ச்சி பக்கம் 11













### தொடர்ச்சி வரலாறு

ராம.அரு.அரு.பழனியப்பச் செட்டியார் அவர்களின் கைங்கரியத்தாலும் யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களின் கைங்கரியத்தாலும் கோயில் நிலம் சைவப் பெருமக்கள் கைக்கு மீண்டும் கிடைத்தது.

இதன் பின்பு முதல் திருப்பணியாக திரு.சி.த.மு.பசுபதிச் செட்டியார் அவர்கள், மண்மாரி பொழிந்து மூடிய பழைய கோயிலிருந்த இடத்தை அகழ்ந்து கண்டுபிடித்ததுடன் புதிய சிவாலயத்தையும் கட்டுவித்து சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் (28.06.1903) ஆயிலிய நட்சத்திரமும் வளர்பிறைச் சதுர்த்தசி திதியும் கூடிய நன்னாளில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். 1948ஆம் ஆண்டிலேயே உத்தியோக பூர்வமாக திருக்கேதீச்சர புனருத்தாரண சபை அமைக்கப்பட்டது. இச் சபையினரின் பெருமுயற்சியால் நந்தன வருடம் ஆகஸ்ட் 1952, சர்வாரி வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (31.10.1960) ஆகிய ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இத் திருப்பணிகளில் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களின் பங்கு அளப்பரியது. அவரின் வழியில் சைவமணி இ.நமசி வாயம், மனிதநேய மாமணி வி.கயிலாயபிள்ளை போன்றவர்கள் செய்த அளப்பரிய திருப்பணிக் கைங்கரியங்களையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். இப்போது இந்திய அரசின் பெரும்பங்களிப்புடன் ரூபா 320 மில்லியனுக்கு மேற்பட்ட செலவில் மாமல்புரத்து சிற்பக் கலைஞர்களால் சிறப்பாக உருவாக்கப்பட்ட சிற்பக்கற்களால் உட்பிர கார மண்டபம் மஹா மண்டபம் நிர்மாணிக்கும் திருப்பணி இறையருளால் முடிவுற்றுள்ளது.

மற்றும் திருப்பணிச் சபையினரால் அடியார்களின் பங்களிப்புடன் சிவன் அம்மன் விமானங்கள் மற்றும் சுற்றுப்பிராகர சந்நிதிகள் தற்போது கருங்கல்லினால் புனரமைக்கப்படுகின்றன. விநாயகர் முருகன் சந்நிதி உட்பட 11 சுற்றுப்பிரகாரங்கள் முடிவுற்றுள்ளன. இத்திருப்பணி வேலைகளை இவ்வருடத்திற்குள் முடித்து 2020 ஆம் ஆண்டு முற்பகுதியில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற நடவடிக்கைகள் எடுத்துவரப் படுகின்றன.

இவ்வாறான வரலாற்றைக் கொண்டு விளங்கும் திருக்கோயிலும் திருப்பணிச் சபையும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் தொடர்ந்து அயராது கௌரியம்பாள் உடனுறை கேதீச்சரப் பெருமான் அருளுடன் அளப்பரும் சிவத்தொண்டாற்றி வருகின்றனர். காலத்துக்குக் காலம் திருக்கோயிலின் தெய்வீகப் பழமை மாறாதவாறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**செல்வரத்தினம் இராகவன் (தலைவர்)**
**திருக்கேதீச்சர ஆலய**
**திருப்பணிச் சபை**

**மா.தவயோகராஜா (தலைவர்)**
**திருக்கேதீச்சர ஆலய**
**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

### சிவராத்திரி விரதம் நோற்று சிவனருள் கிடைக்க வாழ்த்துகிறேன்



மாசி 20ஆம் நாள் (04.03.2019) திங்கட் கிழமை வருகின்ற சிவராத்திரி விரதமானது பல சிறப்புக்களை உடையதாக விளங்குகின்றது. இந்த ஆண்டு சிவராத்திரி அன்று திரயோதசி திதியும் நடுநிசியில் சதுர்த்தசி திதியும் கூடி திங்கட் கிழமை வருவதனால் இந்த வருடம் சிவனை நினைத்து அவரவர் வழமை போல் விரதம் இருந்தால் 3 கோடி சிவராத்திரி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என பலபெரும் சிவாச்சாரியார்கள் உத்தர காரணாகமத்தை ஆதாரமாக வைத்து கூறியுள்ளார்கள்.

சிவன் அடியார்கள் அனைவரும் ஆசார சீலராய் சிவவழிபாட்டை நடத்துவதோடு பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத்தில் நடைபெறுகின்ற சிவராத்திரி விஷேட அபிடேக, பூஜை வழிபாடுகள், தீர்த்தக்காவடி என்பன வற்றில் பங்குபற்றி சிறப்புடன் வாழ உதயன் பத்திரிகை வாயி லாக வாழ்த்தி ஆசிகள் கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ தி. கருணானந்தக்குருக்கள்**
**(பிரதம குரு)**
**திருக்கேதீச்சரம்.**


# தர்சிகா
## ஸ்ரூடியோ & வீடியோ
### மினி கலர் லாப்



**NIC ONLINE படப்பிடிப்பு நிலையம்**
எமது பிரதேச பகுதியில்
தேசிய அடையாள அட்டை
படப்பிடிப்புக்கு அரச அனுமதி
அளிக்கப்பட்ட ஒரே நிலையமான
புகைப்படக் கலையகம்
**தர்சிகா ஸ்ரூடியோ**

- உட்புற வெளிப்புற படப்பிடிப்பு
- Full HD வீடியோ படப்பிடிப்பு
- சிந்தட்டிக், கரிஸ்மா அல்பம்
- கிறிஸ்ரல், டிறோ பிறேம்கள்
- அழைப்பிதழ் காட்.
- கப் பிறிண்டிங்
- பந்தல் வகைகள்
- பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்
- போட்டோகொப்பி (கலர் அன் கறுப்பு வெள்ளை)

A32 வீதி, நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
**Tel:077 2812453, 021 228 3130**







## அருளாசிச் செய்தி

இன்று மகா சிவராத்திரி சிவனுக்குகந்த இந்தப் புனித நாளிலே திருக்கேதீஸ்வரத்திலே நடைபெறுகின்ற விசேட அபிஷேக ஆராதனைகள் பக்திபூர்வமான நிழ்வுகளாகும். இன்றைய இந்தப் புனித புண்ணிய நாளிலே திருக்கேதீஸ்வர நாதருக்கும் கௌரி அம்பாளுக்கும் நிகழும் விசேட அபிஷேக ஆராதனைகளைக் கண்டு தரிசிக்க வரும் அடியார்கள் அனைவரும் புண்ணியஞ் செய்த புனிதர்களாவர். அவர்கள் அனைவருக்கும் பாடல்பெற்ற ஸ் தலத்திலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவபெருமான் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

எல்லாம் வல்லதிருக்கேதீஸ்வரப் பெருமானுடையதிருவருளுக்குப் பாத்திரமாகி அனைத்து அடியார்களும் நல்வாழ்வு கிடைக்கப்பெற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் வாழ்வதற்கு வழி பிறக்கவேண்டும் என்று ஆசிர்வதித்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இன்றைய மகா சிவராத்திரியானது நல்ல முறையிலமைந்து எல்லோரும் நல்வாழ்வு வாழ கேதீஸ்வரப் பெருமானுடைய திருவருட் பிரசாதம் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



# நியூ கௌரி ஜுவலரி

# New Gowry Jewellery

No.33, Grand Bazzar,
Mannar.
Tel: 023 225 1303

Nachchikuda Junction,
Mulangavil.
Tel: 021 228 3128

## சிவனருள் பெற்றிடுவோம், சீர்பெற்று வாழ்ந்திடுவோம்



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

உங்கள் நயம் நம்பிக்கை
நாணயமுள்ள தங்க
வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.



# சரணியா

## நகைப் பூங்கா

Tel: 077 446 2539

மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி
முழங்காவில்.

## திருக்கேதீச்சரத்தானை வேண்டி நிற்போம்

# அபிராமி ஜுவலர்ஸ்

# Abirami Jewellers



தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

பெரியகடை,
மன்னார்.

Grand Bazaar,
Mannar.

Tel: 023 2222 067

KIRUBA LEARNERS

# கிருபா லேனர்ஸ்

# KIRUBA LEARNERS

Govt.Approved A Grade Driving Trainig School

No.1 Driving Training School In North

தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 071 4546 960 0777225292

DS.589 அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை



- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்







வட மாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

### கிளைக் காரியாலயங்கள்:

**யாழ்ப்பாணம்**

227/6. கே.கே.எஸ் வீதி.
சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022. 071 4546 956

முதலாம் கட்டைச் சந்தி.
பருத்தித்துறை.
021 492 3201. 071 4546 961

36. கச்சேரி நல்லூர் வீதி.
(கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 6699. 076 722 5292

ஓம்பிளாசா. பருத்தித்துறை வீதி.
ஆவரங்கால்.
021 222 6688. 071 777 6969

கே.கே.எஸ் வீதி.
தெல்லிப்பளைச் சந்தி. தெல்லிப்பளை.
021 224 3737. 071 4546 959

கண்டி வீதி. சாகவச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
021 227 0700. 071 4546 957

பிரதான வீதி. (பொலிஸ் நிலையம் முன்பாக). நெல்லியடி.
021 300 6550. 071 4546 958

182. சேர் பொன் இராமநாதன் வீதி.
திருநெல்வேலி.
021 221 4488. 0777 227 740

காரைநகர் பிரதான வீதி. சித்தங்கேணி.
021 225 2500. 076 212 1299

**வவுனியா**

216. ஏ9. வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777. 0777 100 444

**மன்னார்**

94. பிரதான வீதி. மன்னார்.
023 225 1656. 077 847 2732

**கிளிநொச்சி**

ஏ9 வீதி. கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505. 071 5646 955

புளியடிச்சந்தி. முல்லை வீதி.
விசுவமடு.
021 320 1515. 077 8585 263

நாச்சிக்குடா சந்தி. மன்னார் வீதி.
முழங்காவில்.
021 300 6544. 070 333 6161


வாடியடி சந்தி. பூநகரி.
021 320 1818. 070 333 7171


Star Rest திருமண மண்டபம்
Star Rest
GRAND WEDDING HALL & LUXURY APARTMENT ROOMS
கிளிநொச்சி நகரில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் அதிநவீன நுட்பத்துடன்முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமணமண்டபம்
luxury apartment Rooms மற்றும் ரெஸ்ரோறன்ற் உதயமாகியுள்ளது நிகழ்வுகளுக்கான
முற்கூட்டிய பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள் ஒருமுறை விஜயம் செய்து பார்வையிடுங்கள்
* திருமண மண்டபம்
* Familyரெஸ்ரோறன்ற்
* சமைப்பதற்கான வசதிகள் கொண்ட Rooms
* எழில் மிகு கிளிநொச்சியின் மாலைக்காட்சியை ரசிப்பதற்கான மேடைத்தளத்திலுள்ள BBQ Roof Top ரெஸ்ரோறன்ற்
* இலவச Wifi வசதிகள்
D/J Dmx தொழில்நுட்பம்
* விஸ்தரிக்கப்பட்ட வாகன தரிப்பிடம்
* மணமகள் அலங்காரம்
* இந்தியன், வெஸ்டன் சைனிஸ் உணவுகளுடன் கூடிய திருமணம் மற்றும் சகல நிகழ்வுகளுக்கும் அலுவலக கலைந்துரையாடல் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.
160th Mile Post
5th Canal Lane
A9 Road, Paranthan.
0212280555
0772315521
www.starresthotel.com
Star Rest Hotel


வடமாகாணத்தின் நீர் சுத்திகரிப்பு துறையில்
மிகத்திறமை வாய்ந்த
Yarl Smart Water Solution (Pvt) Ltd
12 MONTHS WARRANTY
இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்
SPECIAL OFFER
SPECIAL DISCOUNT 5% OFF SPECIAL DISCOUNT
எமது smart சேவைகள்
Domestic RO Plants.
Industrial RO Plants.
Water Softener Plant.
Design & Construction of Swimming Pool, Spa.
Waste Water and Sewage Treatment Plants.
Water Treatment Chemicals and Equipments.
Hotline:- 021 430 0044 , 077 057 3684 , 077 473 9802 , 077 112 6410
No.319, K.K.S Road, Jaffna. / Karadippokku Junction, A9 Road, Kilinochchi.

“

உலகின் இருபெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே நீண்ட காலமாக வர்த்தகப் பிரச்சினை உள்ளது. இதன் காரணமாக சீன பொருள்கள் மீது அமெரிக்கா 250 பில்லியன் டொலருக்கு மேல் கூடுதல் வரி விதித்தது. சீனாவும் அமெரிக்கப் பொருள்கள் மீது 110 பில்லியன் டொலர் கூடுதல் வரி விதித்து பதிலடி கொடுத்தது.



# வரிப்போர் ஆரம்பமா?

வோஷிங்டன், மார்ச் 4

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகிற மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி உள்ளிட்ட பொருள்கள் மீதான இறக்குமதி வரியையும் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று சீனாவை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கேட்டுள்ளார்.

உலகின் இருபெரும் வல்லரசு நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே நீண்ட காலமாக வர்த்தகப் பிரச்சினை உள்ளது. இதன் காரணமாக சீன பொருள்கள் மீது அமெரிக்கா 250 பில்லியன் டொலருக்கு மேல் கூடுதல் வரி விதித்தது. சீனாவும் அமெரிக்க பொருள்கள் மீது 110 பில்லியன் டொலர் கூடுதல் வரி விதித்து பதிலடி கொடுத்தது.

அதைத் தொடர்ந்து ட்ரம்ப், சீன அதிபர் ஜின் பிங் இருவரும் கடந்த டிசெம்பர் மாதம் ஆர்ஜென்ரீனாவில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். அதில், இருதரப்பு வர்த்தகப் போரை தற்காலிகமாக நிறுத்துகிற வகையில், ஜனவரி முதலாம் திகதி முதல் இரு நாடுகளும் ஒன்றின்மீது மற்றொன்று கூடுதல் வரிகளை விதிப்பதில்லை என்று உடன்பாடு செய்துகொண்டனர். இது 90 நாள்களுக்கு நீடிக்கும் என அறிவித்தனர்.


இந்த நிலையில், இப்போது இருதரப்பு வர்த்தகப் பேச்சு இணக்கமான முறையில் நடைபெறுவதால், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகிற மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி உள்ளிட்ட அனைத்துப் பண்ணை பொருள்கள் மீதான இறக்குமதி வரியையும் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று சீனாவை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கேட்டுள்ளார். (ம)

# அமைதியை விரும்பி அபிநந்தன் விடுவிப்பு

## அழுத்தத்தை கருத்தில் கொள்ளவில்லை என பாக். தலைமை அமைச்சர் பதிலடி

இஸ்லாமபாத், மார்ச் 4

இந்தியாவாலும் பன்னாட்டுச் சமூகத்தாலும் வழங்கப்பட்ட அழுத்தங்களைக் கருத்தில்கொண்டுதான் அபிநந்தன் பாகிஸ்தானால் விடுவிக்கப்பட்டார் என்று இந்தியா தெரிவித்துவரும் நிலையில் அழுத்தங்களால் அல்ல அமைதியை விரும்பியே அபிநந்தனை விடுவித்தோம் என்று பதிலடி கொடுத்துள்ளார் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான்.



“அபிநந்தனை நாங்கள் விடுவித்ததற்கு எவருடைய அழுத்தமும் காரணமில்லை. எந்த நாடும் எங்களைக் கட்டுப்படுத்தவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், இந்தியாவின் துன்பத்தை அதிகப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. இந்தியக் குடிமக்களை துயரத்தில் ஆழ்த்த நாங்கள் ஆசைப்படவில்லை. எங்களுக்கு அமைதி வேண்டும். அரசியல் காரணமாக பிராந்தியத்தின் அமைதி ஆபத்துக்கு உள்ளாவதை பாகிஸ்தான் விரும்பவில்லை. அதனால்தான் அபிநந்தனை விடுதலை செய்தோம். ஜெய்ஷ் இ முகமதுக்கு எதிராக ஆதாரங்கள் பகிரப்பட்டால், நடவடிக்கை எடுக்கத்தயாராக உள்ளோம். நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும், தேசவிரோத சக்திகளை என்றுமே பாகிஸ்தான் அனுமதிக்காது”- என்று இம்ரான் கான் மேலும் தெரிவித்தார். (ம)



# உடல்ரீதியான தொல்லைகளை பாகிஸ்தான் கொடுக்கவில்லை!

## இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சரிடம் அபிநந்தன் தெரிவித்தார் எனத் தகவல்

புதுடெல்லி, மார்ச் 4

உடல் ரீதியான தொல்லைகளை பாகிஸ்தான் தனக்குக் கொடுக்கவில்லை என்று இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சரிடம் இந்திய வானோடி அபிநந்தன் தெரிவித்தார் என்று பி.டி.ஐ செய்தி முகாமை செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் இந்தியாவிடம் விங் கமாண்டர் அபிநந்தனை ஒப்படைத்த பின்னர் முதல் முறையாக இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் நேற்று முன்தினம் டெல்லியிலுள்ள மருத்துவமனையில் அவரைச் சந்தித்தார்.

அப்போது, பாகிஸ்தானில் தனக்கு நேர்ந்தது குறித்து நிர்மலா சீதாராமனிடம் பேசிய அபிநந்தன், பாகிஸ்தான் தரப்பில் தனக்கு உடல் ரீதியாக எவ்வித தொல்லையும் கொடுக்கப்படவில்லை என்றும், ஆனால் மனரீதியான உளைச்சலுக்கு உட்படுத்தப்பட்டேன் என்றும் அவர் தெரிவித்தார் என்று அரசு வட்டாரங்கள் வழியாக தங்களுக்கு தெரியவந்துள்ளதாக பி.டி.ஐ செய்தி முகாமை தெரிவிக்கிறது. (ம)

# எவ்-16 வானூர்திகளை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தியமை ஏன்?

## பாகிஸ்தானை விசாரிக்கவுள்ளது அமெ.

வோஷிங்டன், மார்ச் 4

தீவிரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்துவதற்காக அமெரிக்கா வழங்கிய எவ்16 போர் வானூர்திகளை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் பயன்படுத்தியமை ஏன்? என்று பாகிஸ்தானை விசாரிக்கவுள்ளது அமெரிக்கா.

காஷ்மீர் புல்வாமாவில் ஜெய்ஷ் இ முகமது அமைப்பைச் சேர்ந்த போராளி கடந்த மாதம் 14ஆம் திகதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாக கடந்த 26ஆம் திகதி பாகிஸ்தான் எல்லைக்குள் 50 கிலோமீற்றர் தூரத்துக்கு அத்துமீறிய இந்திய போர் வானூர்திகள் பாலகோட், முஷாபராபாத், சாகோட்டி ஆகிய 3 இடங்களில் செயல்பட்ட ஜெய்ஷ்இமுகமது அமைப்பின் முகாம்களை அழித்தன.



இதைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. கடந்த 27ஆம் திகதி பாகிஸ்தான் வான் படையின் போர் வானூர்திகள் காஷ்மீரின் ரஜவுரி பகுதியில் இந்திய இராணுவ நிலைகளைத் தாக்க முயன்றன. அமெரிக்கா வழங்கிய எவ் 16 வகை போர் வானூர்திகளையே பாகிஸ்தான் இதன்போது பயன்படுத்தியது. இந்தப் பின்னணியில் பயங்கரவாதத்தை அழிப்பதற்காக தாம் வழங்கிய எவ் 16 வகை போர் வானூர்திகளை இந்தியாவுக்கு எதிரான போரில் ஏன் பயன்படுத்தினீர்கள் என்று பாகிஸ்தானிடம் அமெரிக்கா விளக்கம் கேட்கவுள்ளது. (ம)



அல்ஜீரியாவில் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஐந்தாவது தடவையாகவும் போட்டியிடும் முடிவை தற்போதைய அதிபரான அப்தலசீஸ் அண்மையில் அறிவித்தார். அவருக்கு எதிராக அங்கு பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# சிரியாவில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது உண்மை

டமஸ்கஸ், மார்ச் 4

சிரியாவில் கடந்த 2018ஆம் ஆண்டு டவுமா பகுதியில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலை பன்னாட்டு விசாரணைக் குழுவொன்று உறுதிப்படுத்தியுள்ளது.



சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டவுமா பகுதியில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் சிரியா அதிபர் அசாத் தரப்பும் ரஷ்யா, ஈரான் ஆகியநாடுகளும்இருப்பதாகஅமெரிக்கா குற்றம் சாட்டியது. இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதா என்பதைக் கண்டறிய 'வோச் டோக்' என்ற பன்னாட்டு விசாரணைக்குழு முன்வந்தது.

அந்தக் குழு நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில் அவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டமை உண்மைதான் என்று கண்டறியப்பட்டுள்ளது.

போரின் போது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவது பாரதூரமான குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை கருதுகிறது. அவ்வாறான குற்றத்தில் ஈடுபடும் தரப்பு போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு கடும் தண்டனைகள் விதிக்கப்படும்.

இவ்வாறான நிலையில் அசாத் தரப்பினர் போர்க் குற்றவாளிகள் என்று அறிவிக் கப்படுவதற்கான அதிக வாய்ப்பை 'வோச் டோக்' அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (ம)



## ஆப்கானிஸ்தானில் தலிபான் தாக்குதலில் 25 சிப்பாய்கள் சாவு!

காபூல், மார்ச் 4

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் 25 சிப்பாய்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். இதுகுறித்து ஆப்கன் அதிகாரிகள் தரப்பில், 'ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் ஹெல்மண்ட் மாகாணத்தில் உள்ள ஆப்கன் இராணுவத் தளத்தில் வெள்ளிக்கிழமை தலிபான்கள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்' என்று கூறப்பட்டது.

பேச்சுக்கு உடன்படுவதாக தலிபான்கள் சமீபத்தில் அறிவித்த நிலையில், தற்போது இந்தத் தாக்குதலை அவர்கள் நடத்தியுள்ளனர். ஆப்கானிஸ்தானில் அரசபடைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படையும் அங்கு முகாமிட்டுள்ளது. (ம)

## ஹம்ஸாவின் குடியுரிமையை இல்லாமல் செய்தது சவூதி!

ரியாத், மார்ச் 4

அல் குவைதா அமைப்பின் அடுத்த தலைவர் என்று வர்ணிக்கப்படும் ஹம்ஸா பின்லேடனின் குடியுரிமையை இல்லாமல் செய்வதாக சவூதி அரேபியா அறிவித்தது.

அல் குவைதா அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவராக ஹம்ஸா பின்லேடன் உள்ளார். அவர் அந்த அமைப்பின் அடுத்த தலைவராக வருவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் எச்சரித்துள்ளன.

இந்த நிலையில் ஹம்ஸாவின் குடியுரிமையை இல்லாமல் செய்வதாக சவூதி நேற்றுமுன்தினம் அறிவித்தது. (ம)

## ஹம்சா பின்லேடன் அல் குவைதாவின் அடுத்த தலைவர்!

வோஷிங்டன், மார்ச் 4



தீவிரவாதி ஒசாமா பின்லேடன் மகன் ஹம்சா பின்லேடன் அல் குவைதா அமைப்பின் அடுத்த தலைவராக வர வாய்ப்புள்ளது என ஐ.நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தடைப்பட்டியலிலும் ஹம்சா பின்லேடன் உள்ளார் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. இதனால், ஹம்ஸா பின்லேடன் எந்த நாட்டுக்கும் செல்வதற்குத் தடை விதிப்பது, சொத்துக்களை முடக்குவது உள்ளிட்ட தடைகள் விதிக்கப்படலாம்.

அல்குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவராக தற்போது இருக்கும் அய்மான் அல் ஜவாஹிரிக்கு அடுத்த இடத்தில் ஹம்ஸா பின்லேடன் உள்ளார். அவரின் தடை தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளியிட்ட அறிவிப்பில் சவூதி அரேபியாவில் பிறந்த ஹம்ஸா பின்லேடன் அல்குவைதா அமைப்பின் அதிகாரபூர்வ உறுப்பினர். தீவிரவாத செயல்களில் இனிமேல் ஹம்ஸாவும் ஈடுபடுவார்.

அல் ஜவாஹிரிக்கு அடுத்ததாக அந்த அமைப்புக்குத் தலைவராகவும் ஹம்ஸா வரக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆதலால், ஹம்ஸா பின்லேடனின் சொத்துக்களையும், நிதி ஆதாரங்களையும், பொருளாதார விடயங்களையும் முடக்குமாறு உறுப்பு நாடுகள் செய்வது அவசியமாகும்.

மேலும் எந்த நாட்டுக்குள்ளும் ஹம்ஸா பின்லேடன் செல்லாதவாறு தடையும் விதிக்கப்படுவது அவசியமாகும். மேலும், ஆயுதங்கள், வெடிபொருள்களை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ விற்பனை செய்வது, வானூர்திகள் விற்பது, உதிரிபாகங்கள் விற்பனை, தொழில்நுட்ப உதவிகள் அளிப்பது, ராணுவ ரீதியான பயிற்சிகள் அளிப்பது போன்றவற்றை அரசுகள் செய்யாமல் தவிர்க்க வேண்டும் என்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. (ம)



## இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் உதவியால் பலவித நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். தாராள பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை ஓரளவு நன்மைதரும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பு தேவைப்படும். செலவில் சிக்கனம் நல்லது. குடும்பத்தில் ஒற்றுமை அவசியம்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. பண்வரவு சிறு செலவுகளுக்குப் பயன்படும்.

**கடகம்:** இஷ்ட தெய்வ அனுகிரகத்தால் முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும்.

**சிங்கம்:** சுறுசுறுப்புடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். நிலுவைப் பணம் வசூலாகும். கலை யம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** முக்கியமான செயல் நிறைவேற தாமதம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாரான அளவில் இருக்கும். சேமிப்பு பணம் முக்கியமான செலவுகளுக்கு பயன்படும்.

**துலாம்:** கஷ்டங்களை நினைத்து மனம் வருந்த நேரலாம். தொழில் வியாபார நடைமுறை சீராக கூடுதல் பணிபுரிவது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். வாகன பராமரிப்பு பயணத்தை எளிதாக்கும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். குடும்ப உறுப்பினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில் வியாபார வளர்ச்சி வியத்தகு முன்னேற்றம் பெறும்.

**தனுசு:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபார நடைமுறை சீராக தகுந்த பணிபுரிவீர்கள். குறைந்த அளவில் பணவரவு இருக்கும்.

**மகரம்:** மதிநுட்பம் நல்வாழ்வுக்கு புதிய வழிகாட்டும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சிறப்பாக பணிபுரிவீர்கள். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கும்பம்:** சிலரது பேச்சு மனதை சங்கடப்படுத்தும். அதிக உழைப்பினால் தொழில் வளர்ச்சி சீராகும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** நடைமுறை வாழ்வு சுமூகமாக அமைந்திடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சில மாற்றம் செய்வீர்கள். பணவரவில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

# ஞானசார தேரரின் மீது போலிக் குற்றச்சாட்டாம்

## சட்டமா அதிபருக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 4


பொது பல சேனா அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடுதலை செய்யப்பட வேண்டும். போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் திட்டமிட்டு அவர் சட்டத்தில் சிக்க வைக்கப்பட்டுள்ளார். சட்டமா அதிபர் திணைக்களம் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தி பொது பல சேனா அமைப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடிதமொன்றைக் கையளித்துள்ளது.

ஹோமாகம நீதிமன்றில் இடம்பெற்ற சம்பவம் உண்மைக்கு முரணான வகையில் சோடிக்கப்பட்டுள்ளது. உண்மையை எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்புக்கள் ஒரு சில தரப்புக்களால் முடக்கப்பட்டது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றத்தை அவதூறு செய்யும் வகையில் கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. ஆனால் சட்டத்தின் தண்டனைக்குள் சிக்க வைக்கும் வகையில் ஞானசார தேரருக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்தச் செயற்பாடுகளை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் அமைந்தன.

ஆகவே சட்டமா அதிபர் ஞானசார தேரரின் விடுதலை விவகாரம் குறித்துக் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டும். சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் செய்யும் தவறுகளையும் திருத்தும் வகையில் சட்டமா அதிபர் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அந்த வகையில் சம்பவ தினமான 2016 ஜனவரி 25 ஆம் திகதி ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நீதிமன்ற அவதூறு விவகாரம் தொடர்பாகச் சிந்திக்க வேண்டும். என்று பொது பல சேனா கடிதத்தில் தெரிவித்துள்ளது. (த-61)

# தூக்குத் தண்டனை; குற்றங்களை குறைக்கச் சரியான தீர்வு இல்லை!

## ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் ஒன்றியம் விசனம்



கொழும்பு, மார்ச் 4

தூக்குத் தண்டனை குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிறனான தீர்வு என்பதற்கு குறிப்பிடத்தக்க எந்த ஆதாரங்களும் இல்லை. போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல்களுக்கான நீண்டகாலத் தீர்வுகளை அடையாளங்காண வேண்டும். அதனைவிடுத்து ஜனரஞ்சகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எத்தனிப்பில் மேற்கொள்ளும் தீர்மானங்களால் எதனையும் சாதிக்க முடியாது.

இவ்வாறு ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. நாட்டில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துத் தொடர்பில் ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் வரிசையில் குறைந்தபட்சம் 13 கைதிகளுக்கேனும் அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருப்பது தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். 43 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த தூக்குத் தண்டனையைத் தற்போது நடைமுறைப்படுத்துவதானது இந்தப் பிராந்தியத்தில் இலங்கையின் மனித உரிமைகளுக்குப் பெரும் தீங்கேற்படுத்துவதுடன், அதற்குப் பன்னாடுகள் மத்தியில் காணப்படுகின்ற அங்கீகாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும். தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அரசதலைவர் எதிர்பார்ப்பது போன்று போதைப் பொருள் தொடர்பான குற்றச்செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

தூக்குத் தண்டனைக் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிறனான தீர்வு என்பதற்கு குறிப்பிடத்தக்க எந்த ஆதாரங்களும் இல்லை.

**ஐ.நா. அறிவிப்பை மீற முற்படாதீர்கள்**

2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தூக்குத் தண்டனைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துக்கு இலங்கை ஆதரவாக வாக்களித்திருந்தது. அவ்வாறிருக்க தற்போது தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது ஐக்கிய நாடுகள் சபையின் அறிவிப்பை மீறுவதாகவும் அமையும். அதேவேளை பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களுக்கு இலங்கை மதிப்பளிக்கத் தவறியுள்ளமை உலகுக்கு எடுத்துக்காட்டாகவும் காணப்படுகிறது.

இந்தநிலையில் இலங்கையின் குற்றவியல் சட்டமுறைமை தொடர்பில் சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியம். அதில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

**காரணங்களை கண்டறியுங்கள்**

போதைப்பொருள் கடத்தலுக்கு வாய்ப்பாக அமையும் முறைகளை இல்லாதொழித்து, போதைப்பொருள் வர்த்தகம் நாட்டில் தொடர்வதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். போதைப்பொருள் சார்ந்த குற்றச்செயல்களுக்கான நீண்டகாலத் தீர்வுகளை அடையாளங்காண வேண்டும்.

அதனைவிடுத்து ஜனரஞ்சகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எத்தனிப்பில் மேற்கொள்ளும் தீர்மானங்களால் எதனையும் சாதிக்க முடியாது - என்றுள்ளது. (த-31)

# பள்ளிவாசல்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

கொழும்பு, மார்ச் 4



முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நலன்கருதி பள்ளிவாசல்கள், குர்ஆன் மத்ரஸாக்கள், அரபுக்கல்லூரிகளைப் பதிவு செய்யவேண்டும். அதுவே தமது சமூகத்தின் நிரந்தரப் பாதுகாப்புக்கு உத்தரவாதமாக அமையும். தற்காலத்தில் எங்களுடைய அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்வது மிகமுக்கியம் என்று முஸ்லிம் சமய, கலாசார மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

உடுநுவர மற்றும் யட்டிநுவர ஆகிய இரு தேர்தல் தொகுதிகளை ஒன்றிணைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் முஸ்லிம்கள் பலவித பிரச்சினைகளை எதிர்நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்வது மிக முக்கியம்.

கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் இடமாக அக்குறணையை அடுத்து உடுநுவர திகழ்கிறது. முன்னர் பள்ளிவாசல்களைப் பதிவு செய்வதில் சிரமங்கள் இருந்தன. பள்ளிவாசல்களைப் பதிவு செய்ய பல விதமான ஆவணங்கள் கோரப்பட்டன. குறிப்பாக அருகிலுள்ள பௌத்த விஹாராதிபதியின் கடிதம் அப்போது தேவைப்பட்டது. தற்போது இவை அனைத்தையும் நீக்கி மிக இலகுவான முறையில் பள்ளிவாசலுக்கு உரிய காணி உறுதியிருந்தால் மட்டும் போதும் என்ற வகையில் பள்ளிவாசல்களைப் பதிவு செய்வதற்கு சலுகை வழங்கி ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் - என்றார். (த)

# சு.கட்சி, முன்னணி இணைந்து அரசுக்கு எதிராகப் போராட்டம்!

## எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டியில்

கொழும்பு, மார்ச் 4

அரசுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களையும் பேரணிகளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுமக்கள் முன்னணியும் கூட்டிணைந்து நடத்தவுள்ளன.

இதன் முதலாவது போராட்டமும் கூட்டமும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது. ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டித்தும், மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது தொடர்ச்சியாக பிற்போடப்பட்டுக் கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இவை நடத்தப்படவுள்ளன.

முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தலைமையில் பொதுமக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்கேற்ற கூட்டமொன்று கடந்த வாரம் நடைபெற்றிருந்தது.

அதில் ஆளும் அரசின் போக்குகளைக் கண்டித்தும், மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கோரியும் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென்றயோசனை முன்வைக்கப்பட்டது.

இத்தகைய போராட்டங்கள் மற்றும் பேரணிகளின் போது இருதரப்பினரும் இணைந்து செயற்படுவதெனவும் இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைவாக போராட்டங்கள் மற்றும் பேரணிகளை முன்னெடுப்பது தொடர்பானவிடயங்களைக் கையாள்வதற்காக, குழுவொன்று நியமிக்கப் பட்டிருக்கிறது. (த-61)

# லால்காந்தவுக்கு விளக்க மறியல்

கொழும்பு, மார்ச் 4

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்தவை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்க அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து ஜயந்தி மாவத்தைப் பகுதியை நோக்கி கெப் வாகனத்தில் பயணித்த அவர் எதிர்த் திசையிலிருந்து வந்த உந்துருளியுடன் மோதியுள்ளார். அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அண்மையிலேயேவிபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த உந்துருளியில் பயணித்த இரு பெண்களும், அநுராதபுரம் மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் விபத்து இடம்பெற்ற போது லால்காந்த மதுபோதையில் இருந்துள்ளமை மேற்கொள்ளப்பட்டவிசாரணைகளின் பின்னர் தெரியவந்துள்ளது. (க-71)

## போதைப் பொருள் பாவனையை

# தடுக்கும் பொறுப்பு பெற்றோர்க்கும் உண்டு

கொழும்பு, மார்ச் 4

போதைப் பொருள் பாவனையிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் சமூகத்தின் கடமை. எனினும் பொறுப்பை அதிபர், ஆசிரியர்களிடம் ஒப்படைத்துவிட்டு பெற்றோர்கள் ஒதுங்கி நிற்க முடியாது. அவர்களும் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் கவனமாக இருந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார். பதுளை மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் பாவனை காரணமாக நாட்டில் தற்போது நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இதனால் பாடசாலை மாணவர்களும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். மலையகப் பாடசாலைகளிலும் இதன் பாவனை பரவுகிறது. போதைப் பொருள்கள் எமது மாணவர்களுக்குப் புதியவை. ஆரம்பத்திலேயே இதனைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்கள் அதனை விரும்பிச் செய்வதில்லை. விற்பனை செய்பவர்களே பழக்கி வருகின்றார்கள். அது அவர்களின் வியாபார உக்தி. தற்போது மலையகத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றது. எமது சமூகம் முன்னேற வேண்டுமானால் அது கல்வியிலேயே தங்கியுள்ளது. போதைப் பொருள் பாவனை மூலமாக அது சிதறிவிடக்கூடாது - என்றார். (த)

# நாட்டு நலனுக்காக கூட்டரசு அமைந்தால் தவறு இல்லை

## இராஜாங்க அமைச்சர் விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

நாட்டின் நலன் கருதி தேசிய அரசு அமைக்கப்பட்டால் அதனைத் தவறு எனக் கூற முடியாது. ஆனால் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தேசிய அரசு அமைக்கப்படுமாக இருந்தால் அதில் தனக்கு உடன்பாடில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

தேசிய அரசு அமைக்கப்பட்டால் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என 19 ஆம் அரசமைப்புச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது அதனையொரு தடையாகவே நான் கருதுகின்றேன். அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதை மாத்திரம் நோக்காகக் கொண்டு தேசிய அரசு அமைக்கப்படுதல் தவறான விடயம்.

கடந்தகாலங்களில்திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்படாத அபிவிருத்தித் திட்டங்களை முழுமையாக நிறைவு செய்வதற்கு அரசுக்கு மிகக் குறுகிய காலமே காணப்படுகின்றது.

அவற்றை முழுமையாகச் செய்து முடிப்பதற்காக தேசிய அரசு அமைக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேறு தொழில்களிலும் ஈடுபட முடியும். அவர் அமைச்சராகவும் இருப்பின் வேறெந்தத் தொழில்களிலும் ஈடுபட முடியாது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். இந்த விடயம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ட்ரான்பெரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு கோரப்பட்டதற்கு அமைய தனது மாதாந்த ஊதிய விவரத்தைப் பகிரங்கமாக அறிவித்திருந்தமை தொடர்பில் தெரிவித்த அவர்,

அரசியலில் ஈடுபடுவதன் மூலம் பொதுச் சொத்துக்களை கொள்ளையிடவும், ஊழலில் ஈடுபடவும் முடியும் என்பதே பலரின் அபிப்பிராயமாக உள்ளது. அத்தகையதொரு அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கே நாங்கள் அனைவரும் தற்போது முன்வந்திருக்கின்றோம். நாங்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எமக்குள் கொள்கை ரீதியான வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டில் எவருக்கும் மாற்றுக்கருத்துக்கள் இல்லை.

வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களைப் பொறுத்தவரை, அவர்கள் அமைச்சரவை அமைச்சர்களாக இருப்பின் தமது விவரங்களை அரசதலைவரிடமும், நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரம் இருப்பின் தமது விவரங்களை நாடாளுமன்றுக்கும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்தநிலையிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் - என்றார். (கு-31)





# மைத்திரிக்கு நிதி ஒதுக்குவதை எதிர்த்தால் முறுகல் ஏற்படும்

## அமைச்சர் ராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சில பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசதலைவரின் செலவினங்களுக்கான வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்து அதனைத் தோற்கடிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் சிறப்புப் பகுதிகளுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத்திட்டத்தின் கீழ் தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயத்தில் 15 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்பப் பிரிவுக்கான கற்றல் வள நிலையக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் அரசதலைவராக இருந்தவர்கள் தங்கள் செலவினங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாக்களை ஒதுக்கீடு செய்து கொண்டார்கள். ஆனால் இன்றைய அரசதலைவர் அப்படிச் செய்வதில்லை. அரசதலைவரின் செலவினங்களுக்கான வரவு-செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதன் மூலமாக அரசதலைவருக்கும் தலைமைஅமைச்சருக்கும் இடையிலான முறுகல் நிலை அதிகரிக்குமே தவிர குறைவடையாது. எனவே இதுஎங்களுக்கும் இந்த நாட்டுக்கும் மேலும் பாதகமாக அமையும். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நாம் செயற்பட வேண்டும். நாங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற வகையில் அப்படிச் செயற்படுகின்றோம் - என்றார். (கு)

# சதியைத் தோற்கடித்தும் மைத்திரி திருந்தவில்லை!

## நிதி ஒதுக்கீட்டை எதிர்ப்போம் என்கிறார் முஜிபுர் ரஹ்மான் எம்.பி

கொழும்பு, மார்ச் 4

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் சதி தோற்கடிக்கப்பட்ட பின்னரும், அவர் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியைத் தாக்கும் வகையிலான கருத்துக்களையே கூறிவருகின்றார். எனவே எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் அரசதலைவர் செயலகம், அவரது அமைச்சு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராகவே வாக்களிப்போம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கான வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றில் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், முஜிபுர் ரஹ்மான் தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிசேனவை நாங்கள் ஒன்றிணைந்தே பதவியில் அமர்த்தினோம். அவருடன் இணைந்து அரசியல் பயணத்தை முன்னெடுத்ததுடன், நாட்டில் பல்வேறு மாற்றங்களையும் மேற்கொண்டிருக்கின்றோம். கடந்த ஒக்ரோபர் மாதம் எமக்கும், அவருக்கும் எதிராக இருந்த அரசியல் அணியுடன் இணைந்து இந்தநாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். அந்த முயற்சி நீதிமன்றால் தோற்கடிக்கப்பட்டது. நாங்கள் மீண்டும் எம்முடைய அரசை உருவாக்கினோம்.

ஆனாலும் அரசதலைவர் தற்போது ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் அதன் தலைவர்களைத் தாக்கும் வகையிலான கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றார். நாடாளுமன்றில் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத்திட்டத்தில் அரசதலைவர் செயலகம், அரசதலைவரின் அமைச்சு உள்ளிட்டவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு நாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை. அரசதலைவர் தற்போது புதிதாக இணைந்துகொண்டுள்ள அரசியல் அணியினரின் வாக்குகளைப்பெற்று அதனை நிறை வேற்றிக் கொள்ள முயற்சிக்கலாம்.

அரசதலைவருடன் தொடர்புடைய ஒதுக்கீடுகளுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் இருக்கின்றார் என்றார். (கு-61)

# கிழக்கிலும் நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 4

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை, கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏம்.ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். வடக்கு மாகாணத்திலும் செவ்வாய்க்கிழமை அன்று பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு வடக்கு ஆளுநர் ஏற்கனவே அறிவித்தல் விடுத்த நிலையில், கிழக்கிலும் இந்த அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் ஆளுநர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தனர். வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வடக்கு மாகாணத்துக்கு தமிழரும், கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஆளுநரும் நியமிக்கப்பட்டிருந்தனர். கிழக்கில் நியமிக்கப்பட்ட முஸ்லிம் ஆளுநரை மாற்றுமாறு அங்கு கடந்த சில நாள்களுக்கு முன்னர் போராட்டங்கள் இடம்பெற்றுவந்தன. (க-21)

# நிறைவேற்றதிகார ஒழிப்புக்கு ஐ.தே.கவினர் பச்சைக் கொடி

## ஐ.தே.முன்னணியின் பங்காளிகள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 4

நிறைவேற்றதிகார அரசதலைவர் முறைமையை நீக்கி நாடாளுமன்ற முறைமையை உருவாக்கும் 20 ஆவது அரசமைப்பு சீர்திருத்தத்தை நிறைவேற்றும் ஜே.வி.பியின் தீவிர முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி பச்சைக் கொடி காட்டியுள்ள போதிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பங்காளிக் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளுடன் அடுத்த வாரம் ஜே.வி.பி பேச்சு நடத்தவுள்ளதாக அதன் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றதிகார முறைமையை ஒழிப்பதற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்று தெரிவித்துள்ளது. எனினும் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணி நிறைவேற்றதிகார முறைமையை நீக்குவதற்கு உடன்பாடில்லை என்றவாறு கருத்துக்களை முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிடுகையில், ஒவ்வொருவரும் விரும்பும் வகையில் நிறைவேற்றதிகார அரசதலைவர் முறைமையை நீக்க முடியாது. இந்த நாட்டில் நிறைவேற்றதிகார முறை தொடர்ந்தும் காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அத்தோடு ஒற்றுமையும் அவசியமாகின்றது. தேர்தலின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் அரசதலைவர் நர்ட்டுக்குத் தேவை. இந்த நிலைப்பாட்டைப் பலப்படுத்த ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சம்பிக்க, ரவுப் ஹக்கீம் மற்றும் ரிஷாட் ஆகியோர் எம்முடனேயே இருப்பார்கள். நிறை வேற்றதிகார அரசதலைவர் முறைமையை நீக்குவதில் எமக்கு உடன்பாடில்லை என்று கூறியுள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் நிறைவேற்றதிகார அரசதலைவர் முறைமையை நீக்கி நிறைவேற்றதிகாரம் கொண்ட தலைமைஅமைச்சர் ரணில் விக்ரமசிங்கவை தெரிவு செய்யும் வகையிலான ஜே.வி.பியின் சதித்திட்டத்துக்கு தாம் ஒரு போதும் ஒத்துழைக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (கு-31)

## க.பொ.த. சாதாரணதர பரீட்சார்த்திகள்

# அ. அட்டைக்கு விண்ணப்பிக்க 31ஆம் திகதியே இறுதித் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் இம்முறை தோற்றவுள்ள பரீட்சாத்திகள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்ப படிவங்களை ஆட்பதிவு திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும் என இலங்கை ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்ததாவது:

2019 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்குத் தேசிய அடையாள அட்டையை வழங்கும் செயற்திட்டம் ஆட்பதிவு திணைக்களத்தினால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எம்மால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்று அறிக்கையை நன்கு அவதானித்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில்கொண்டு தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்ப படிவங்களை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்பதிவுதிணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றோம்.

கடந்த வருடம் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சாத்திகளில் சிலர் எம்மால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை சரியாக பின்பற்றாமையின் காரணமாக, உரிய நேரத்தில் தேசிய அடையாள அட்டையை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆட்பதிவு திணைக்களத்தில் உள்ள ஒளிப்படப் பிடிப்பு பிரிவின் மூலம் ஒளிப்படங்களை எடுத்து அதனூடாக விண்ணப்பிக்க வேண்டும். இதன் போது பெற்றுக் கொள்ளப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சேவை பெறுநர்களிடம் வழங்கப்படும். எனவே பரீட்சாத்திகளின் விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர் நன்கு பரிசீலித்து தவறற்றது என்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். - என்றார். (க-31)



## கள்ளிக்குளம் "கிராமத்தின் கிராமசக்தி" செயல்திட்டம்

வவுனியா,மார்ச் 4

கள்ளிகுளம் "கிராமத்தின் கிராமசக்தி" இறுதி நாள் செயற்திட்ட நிகழ்வு கிராமஅலுவலர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பெருமளவான கிராம மக்கள் அனைவரினதும் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வானது , கலை பண்பாட்டுநிகழ்வுகளுடன் நிறைவுபெற்றிருந்தது.

இந்த நிகழ்வுக்கு வவுனியா நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், பாலபிரசன்னா,காலாசார அலுவலர் நித்தியானந்தன், மதகுருமார் ,ஆசிரியர்கள்,மாணவர்கள், இளையோர் எனப்பலர் கலந்துகொண்டனர். (க-110)

## பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய விருது பெற்ற மாணவிகள்



இலங்கைப் பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருதை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளான மேரி பௌஸ்ரினா டொனால்ட் பாஸ்கர், ஆன் குழலினி கியூபேட் அன்ரனி, லக்ஷிகா நடேஸ்வரன், தமிழினி மதுராஞ்சலி கஜேந்திரன், கௌதமி கௌரிதாசன் ஆகியோர் இந்த வருடம் தமதாக்கியுள்ளனர்.

இலங்கைப் பெண்கள் சாரணிய அமைப்பின் தேசிய அரச தலைவர் விருது வழங்கும் நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி கொழும்பு அலரிமாளிகையின்முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முதல் தடவையாக இந்த விருதை இவர்கள் திருமதி சிம்ரின் சிங்கிடமிருந்து பெற்றுக்கொண்டனர். (க)

## செய்முறை திறன்காண் பரீட்சை

அழகியற் கற்கைகள் நிறுவனத்தி னால் நுண்கலைமாணி பட்டப் படிப்புகளுக்கு (கர்நாடக சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் கட்புல, தொழில்நுட்பக் கலைகள்) மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சைகள் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் எதிர்வரும் 11,12,13,14 ஆம் திகதிகளில் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதியட்டைகள் பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நாளை திங்கட்கிழமை வரை அனுமதியட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 0652222663 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## நூல்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 4

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைச் சேர்ந்த அமரர்களான மரியாம் பிள்ளை - மரியம்மா ஆகியோரின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

விசுவமடு மத்தி சனசமூக நிலைய நூலகத்துக்கு 70ஆயிரம்ரூபாபெறுமதியானநூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (க-222)



## சீருடைகள் வழங்கல்

முல்லைத்தீவு, மார்ச் 4

கோப்பாய் மத்தி ராசன் கிராமத்தில் ராசன் முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை சமூக சேவையாளரான வதனி அல்வின் வழங்கியிருந்தார்.

கடந்த 1 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் மக்கள் ஆதரவு மையத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ச.சுரேந்திரன் , மக்கள் ஆதரவு மையத்தின் சுற்றுச் சூழல் மற்றும் இடர் முகாமைத்துவ திட்ட இணைப்பாளர் ந.விநோத், மக்கள் ஆதரவு மையத்தின் கள அலுவலர் சி. ஜெபதீபன் இவர்களுடன் ஆசிரியர்கள்,மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (க-222)

## மாணவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 4

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினூடாக சின்னத்துரை ஜெகநாதனின் 70ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பல்வேறு வகையான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊற்றுப்புலம் அரசினர் தமிழக்கலவன் பாடசாலையில் கல்வி கற்றுவரும் வசதியற்ற 125 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், பிரமந்தனாறு மகாவித்தியாலத்தின் நூலகத்துக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும், உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் சீரமைப்புப்பணிக்காக ஒரு இலட்சம் ரூபாவினையும், கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மாணவர்களுக்கு நான்கு ஈருருளிகளும், வசதியற்ற நான்கு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும், பெண்தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக சிற்றுண்டிச்சாலைக்கான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் திரு. எஸ். சந்திரகுமாரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (க)



## கட்டட தொகுதி திறந்து வைப்பு

மன்னார், மார்ச் 4

நாடளாவிய ரீதியில் உள்ள 200 பாடசாலைகளில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் ஒரே நாளில் திறக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், மன்னார் மடு கல்வி வலயத்தில் உள்ள அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டட தொகுதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த 1 ஆம் திகதி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதன் மற்றும் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் அருட்தந்தை, பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-56)

## ஆனந்த இல்லத்தில் மகளிர் தின நிகழ்வு

வவுனியா மணிபுரத்தில் உள்ள ஆனந்த இல்லமான பெண்கள் மனநலக்காப்பகத்தில்பன்னாட்டுமகளிர்தினம்நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.சிறிநிவாசனின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இல்ல முகாமையாளர் திருமதி ஜெயமலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், செட்டிக்குளம் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் திருமதி சா. ஜீவசாந்தி, தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார் கண்ணன், ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மனநலகாப்பகத்தில் உள்ளவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரதேச சபை உப தலைவர் வெ.மகேந்திரன், எம்.ஜீ.ஆர் நற்பணி மன்றத்தின் சார்பில் பெண்கள் அபிவிருத்தி அலுவலர் திருமதி சுபா தர்சன், சபாநாதன்,கவிஞர் மாணிக்கம் ஜெகன், அந்தோனி ஐயா, கஜபதி மற்றும் மருத்துவமனை மனநலப் பிரிவினர், சமூக ஆர்வலர்கள், சிறார்கள் ஆகியோர் சிறப்பித்தனர்.

வீ 3 பவுண்டேசன் ஊடாக கனடாவைச் சேர்ந்த கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் கணேசு சுதாகரன் சுஜிதா தம்பதிகள் இதற்கான அனுசரணையை வழங்கி இருந்தனர். (க-222)





# இரணைதீவு மக்களின் இன்னல்கள் தீரவில்லை

## அடிப்படை வசதிகள் இன்றி அந்தரிப்பு

மீள்குடியமர்ந்த மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சகல உரிமைகளும், சகல வசதிகளும் இரணைதீவு மக்களுக்கும் சென்றடைய வேண்டும். அதற்கேற்ற நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் என்று ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.





இரணைதீவு மக்கள் இரணைதீவில் குடியமர்ந்து ஓராண்டுக்கு மேல் ஆகின்றது. அங்குள்ள மக்களுக்கு இதுவரை அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. வீட்டுத் திட்ட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை. அங்கு மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

**தொடர் போராட்டம்**

கிளிநொச்சி, இரணைதீவில் வசித்த 167 குடும்பங்கள் 1992ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்தனர். அவர்கள் கிளிநொச்சியிலும், வடக்கின் ஏனைய இடங்களிலும் குடியமர்ந்திருந்தனர். போர் முடிவுற்ற பின்னர் அவர்கள் தம்மைத் தமது பூர்வீக நிலமான இரணைதீவில் குடியமர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். 2017ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தம்மைப் பூர்வீக நிலத்தில் குடியமர்த்த வேண்டும் என்று கோரித் தொடர்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அவர்கள் முழங்காவில் கடற்படைத் தளத்தின் முன்பாக 6 மாதங்களுக்கு மேலாகப் போராட்டம் நடத்தினர். அந்தக் காலகட்டத்தில் பல தரப்புகளுடனும் அவர்கள் தமது கோரிக்கை தொடர்பாகச் சந்தித்துப் பேசினர். அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், பொது அமைப்புக்கள் எனப் பல தரப்புகளும் அவர்களைச் சந்தித்தனர். எனினும் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சு இரணைதீவை விடுவிப்பது தொடர்பாக ஆராய்ந்தது. காணிகள் விடுவிக்கப்படும். அளவீடு நடைபெறுகின்றது என்று காலத்துக்குக் காலம் பல தகவல்கள் வெளியான போதும், மக்கள் மட்டும் குடியமர்த்தப்படவில்லை.



**பொறுமை இழந்த மக்கள்**

தொடர் போராட்டம் நடத்திவந்த மக்கள் ஒரு கட்டத்தில் பொறுமை இழந்தனர். அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் நம்பாது தாமே செயலில் இறங்கினார்கள். கடந்த ஆண்டு சித்திரை மாதம் 200க்கும் மேற்பட்ட படகுகளில் மக்கள் இரணைதீவை நோக்கிப் புறப்பட்டனர். இரணைதீவைச் சென்றடைந்த மக்கள் அங்குள்ள தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்தனர். அங்கிருந்த கடற்படையினர் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர். மக்கள் அங்கு தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துத் தங்கினர். சொந்த இடத்தை விட்டு அகலப் போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்தனர்.

**புறக்கணிப்பு**

மக்கள் அங்கு குடியமர்ந்த பின்னர் அரசியல் தலைவர்கள் பலரும் அங்கு சென்று மக்களைச் சந்தித்தனர். உதவிகள் வழங்கப்படும் என்று கூறித் திரும்பினர். ஆனால் அந்த மக்களுக்கு இதுவரை எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. அவர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றிய நிலையிலேயே வாழ்கின்றனர்.

தாமாகவே சென்று குடியமர்ந்ததாலோ என்னவோ அதிகாரிகள் தம்மைப் புறக்கணிக்கிறார்கள் என்று அந்த மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகள் இரணைதீவுக்கு வருவது மிகக் குறைவு. அப்படி வந்தாலும் கூட எமது பிரச்சினைகளைக் கேட்டறிவது இல்லை. சமுர்த்திக் கொடுப்பனவு, ஏனைய கொடுப்பனவுகளைக் கூட அதிகாரிகள் வழங்குகிறார்கள் இல்லை. சிறிய தொகை உதவிப் பணம் சிலருக்கு வழங்கப்படுகின்றது.

அதைப் பெறுவதற்குக் கூட 14 மைல் தூரம் கடலில் பயணித்து இரணைமாதா நகருக்குச் செல்ல வேண்டும். மருத்துவ வசதிகள் எவையும் இல்லை என்றும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

**முறைப்பாடு**

இரணைதீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்கியிருந்தது. அந்த முறைப்பாடு தொடர்பாக ஆராய்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண, கிளிநொச்சிப் பிராந்திய அதிகாரி ரி.கனகராஜ் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் அங்கு சென்றனர். அங்குள்ள வீடுகள், கோயில், பாடசாலைகள் அனைத்தையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தனர். தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

**விரைவில் நடவடிக்கை**

இரணைதீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்கின்றோம். சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை அழைத்து அவர்களிடம் விளக்கம் கோரவுள்ளோம் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த ஆண்டில் அனைத்து அரச திணைக்களங்களையும் ஒரு நடமாடும் சேவைக்கு அழைத்து இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வது என்று திட்டமிட்டுள்ளோம். இந்தத் தீவு அண்மையிலேயே மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஏனைய பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த மக்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் இந்த மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

போரால் பெரும் பாதிப்புக்களை இழந்து தற்போது மீள்குடியமரும் மக்கள் தமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களை அரசும், அதிகாரிகளும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பெரும் போராட்டத்தின் பின்னர் தமது பூர்வீக நிலத்தில் குடியமர்ந்துள்ள இரணைதீவு மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (எ-21.56)



## வகுப்பறை திறப்பு விழா

கொடிகாமம், மார்ச் 4

யாழ்ப்பாணம், நாவற்குழி மகா வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொண்டார். ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைக் கட்டடத்தை முதன்மை விருந்தினர் வைபவரீதியாகத் திறந்தார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-159)

## தாய்மொழி தின நிகழ்வு



சாவகச்சேரி, மார்ச் 4

யாழ்ப்பாணம், மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தின் பன்னாட்டு தாய்மொழி தின நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலய ஓய்வுபெற்ற உப அதிபர் த.சிவப்பிரகாசம் கலந்து கொண்டார். (ஐ-9)

## கற்றல் வள நிலையம் திறப்பு

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப கற்றல் வள நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கனகபுரம் மகா வித்தியாலயத்தில், கல்வி அமைச்சின் நிதியொதுக்கீட்டில், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆரம்ப கற்றல் வள நிலைத்துக்கான புதிய கட்டடமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விச் சமூகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-222)



## பண்ணை அமைக்க உதவி




வவுனியா, மார்ச் 4
புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்கும் மருத்துவச் செலவுக்கும் சிரமப்படும் வவுனியாவை சேர்ந்த முருகேசுப்பிள்ளைக்கு உதவும் இதயங்கள் நிறுவனத்தின் ஊடாக முதல்கட்டமாக கோழி பண்ணை அமைப்பதற்கு 78 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
வேலை முடிவடைந்த பின்னர், மிகுதிப் பணம் வழங்கப்படும் என தமிழ் மன்றம் பிறை பேர்க் அங்கத்தவர்கள், பங்களிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-222)

# இரவு 7 மணிக்குப் பின்னர் ரியூசன்களைப் பூட்டுங்கள்

## வவுனியா நகர சபை அறிவுறுத்து பதிவு மேற்கொள்ளவும் உத்தரவு

வவுனியா, மார்ச் 4
வவுனியாவில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் தினமும் இரவு 7 மணியுடன் வகுப்புக்களை நிறைவு செய்யவேண்டும். சட்டத்துக்கு உட்பட்டு அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று வவுனியா நகரசபை அறிவித்துள்ளது.

வவுனியா நகரசபைக்குட்பட்ட சகல தனியார் கல்வி நிலையங்களும் மாலை 7 மணியுடன் தினமும் நிறைவடைதல் வேண்டும். அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளில் ஜி.சி.ஈ சாதாரண தரம், உயர் தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வகுப்புக்கள் மட்டும் நடத்தப்படுவதுடன் ஏனைய வகுப்புக்கள் நடத்துவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.
நகரசபைக்குட்பட்ட சகல தனியார் கல்வி நிலையங்களும் நகரசபை கட்டளைச் சட்டத்துக்கமைய பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிவரும் என்பதை மனவருத்தத்துடன். அறியத்தருகின்றோம் என்று தனியார் வவுனியாவில் உள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு நகரசபையால் அறிவித்தல் வழங்கப்பட்டது.
வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளுக்கு நகரசபை வாகனம் ஒன்றில் சென்ற நகரசபையினர் அந்த அறிவித்தலை ஒலிபெருக்கிமூலம் அனைத்து இடங்களுக்கும் தெரியப்படுத்தினர். இதைக் கேட்ட பெற்றோர்கள் சிலர் தினமும் தனியார் வகுப்புக்கள் எனச் செல்லும் மாணவர்களுக்கு ஒருநாள் விடுமுறை வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயம் என தெரிவித்தனர். (க-21)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 4
கிளிநொச்சி உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையில் கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
பாடசாலையில் தோற்றிய மாணவர்களில் வெற்றி பெற்ற 10 மாணவர்களுக்கு பிரான்ஸ் உதவும் உறவுகளால் பதக்கம் அணிவிக்கப்பட்டு ஈருருளிகள் வழ்ங்கப்பட்டன.
பரீட்சைக்கு தோற்றிய மிகுதி மாணவர்களுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கியதுடன் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் அருமைநாயகம் கலந்துகொண்டார். (ஜ-222)



## இசைக் கருவிகள் கையளிப்பு

வவுனியா,மார்ச் 4
வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரிக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் மற்றும் அதற்கான சீருடைகள் என்பனவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அண்மையில் வழங்கினார்.
2018 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த வாத்தியகருவிகள் மற்றும் சீருடைகள் என்பன வழங்கப்பட்டன. (ஜ-222)




# நாம் போதைப்பொருள் தடுப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்

## விமலரத்தின தேரர் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 4
மன்னார் பகுதியில் நாம் சர்வ மத தலைவர்கள் முக்கியஸ்தர்கள் கூட்டம் எனக் கூடி வெறும் தீர்மானங்களை மட்டும் எடுத்துவிட்டுச் செல்வதை தவிர்த்து,மன்னாரில் தொற்றியிருக்கும் பெரும் பிரச்சினையான போதைப் பொருள் தடுப்பு விடயத்தில் நாம் மிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என, மன்னார் நகர் சாந்திபுர விகராதிபதி பி.விமலரத்தின தேரோ் தெரிவித்தார்.
'சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்' இலங்கையில் இடம் பெற்ற முரண்பாடுகளின் பின்னர் ஏற்பட வேண்டிய நல்லிணக்கம் சம்பந்தமாக மன்னார் மாவட்டத்தில் இலங்கை தேசிய சமாதானப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டத்தின் நடப்பாண்டுக்கான முதலாவது கூட்டம்கடந்த 28ஆம் திகதி தேசிய சமாதானப் பேரவை நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஏ.மெடோசன், மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்க இணைப்பாளர் சிங்கிலாய்ர் பீற்றர் ஆகியோரின் ஏற்பாட்டில் அருட்பணி தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தில் இடம்பெற்றது.
இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் மன்னார் கிளையும் மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கமும் இணைந்து மன்னாரில் முன்னெடுக்கும் சமாதானம் நோக்கிய திட்டங்கள் சம்பந்தமாக ஆராய்ந்தபோது மன்னார் சாந்திபுர பௌத்த ஆலய விகராதிபதி பி.விமலரத்தின தேரோ இங்கு கருத்து தெரிவிக்கையில்
நாம் மாதாமாதம் சர்வமத தலைவர்கள் என்ற பெயரில் ஒன்றுக்கூடலை நடத்தி தீர்மானங்களை முன்னெடுத்துச் செல்லுகின்றோம். இது நல்ல விடயம்தான்.
ஆனால் எடுக்கப்படும் தீர்மானங்களில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளோம் என்பது ஒருபுறமிருக்க, தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் நாளுக்கு நாள் ஒரு மாபெரும் தொற்று வியாதி போன்ற ஒரு செயல்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
அதுதான் மன்னார் மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களும் பாவனைகளும். இது விடயத்தில் நாம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றோமா என்பதை இந்த இடத்தில் நமக்குள் நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். நான் மன்னார் மாவட்டத்தின் பௌத்த விகாரையின் விகராதிபதியாக 2005 ஆம் ஆண்டு

> “நான் மன்னார் மாவட்டத்தின் பௌத்த விகாரையின் விகராதிபதியாக 2005 ஆம் ஆண்டு வந்தேன். இப்பகுதியில் அனைத்து மக்களும் வாழ்கின்றனர். நாங்கள் அன்று தொட்டு இன்றுவரை ஒரே தாய் பிள்ளைகளாகவே வாழ்ந்து வருகின்றோம்.


வந்தேன். இப்பகுதியில் அனைத்து மக்களும் வாழ்கின்றனர். நாங்கள் அன்று தொட்டு இன்றுவரை ஒரே தாய் பிள்ளைகளாகவே வாழ்ந்து வருகின்றோம்.
இப்படியான நிலையில் மன்னார் பகுதியில் பரவி வரும் இவ் தொற்று தொற்றா நோய்களும் போதைப்பொருள் பாவனையானது எமது மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது என்பது கண்கூடாக காட்டுகிறது. மன்னார் மாவட்டதை மட்டுமல்ல எமது அயல் கிராமங்களை மாவட்டத்தை, நாட்டையே குட்டிச் சுவராக்கும் நிலைக்கு இது தள்ளிவிடும் அபாயம் தோன்றியுள்ளது.
ஆகவே சமாதானத்தை நோக்கிய பயணத்தில் நாம் இருக்கும் இந்த வேளையில் போதைப்பொருள் விடயத்திலும் நாம் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும் - என்றார். (க-60)

## மல்வில் கிருஷ்ணன் கோவிலில் சிவராத்திரி

பளை, மார்ச் 4
பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் மகா சிவராத்திரி விழாவும் 9ஆவது அறநெறிச் சமூக விழாவும் இன்று இரவு 7 மணிக்கு கோவில் முன்றலில் இடம்பெறும்.
கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சி.குமாரவேள், சிறப்பு விருந்தினர்களாக பளை மத்திய கல்லூரி ஓய்வுநிலை அதிபர் சி.பாலகிருஷ்ணன், பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக நிர்வாக அலுவலர் திருமதி சி.சயந்தினி ,மதிப்புறு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலக முகாமைத்துவ உதவியாளர் க.கோகுலன், பளை வர்த்தக சங்கத் தலைவர் க.வைகுந்தநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் சிவராத்திரி தினத்தையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெற்ற பிரதேச மாணவர்கள், சமூக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய உயர் சேவையாளர்கள், ஆகியோர் மதிப்பளிப்பு மற்றும் நான்கு ஜாமப் பூஜைகளும் இடம்பெறும்.
உற்சவகுருசிவாகமசேகரர் பிரம்மசிறிமுரளிதர வித்தியானந்தக் குருக்கள் தலைமையில் பூசைகள் நடைபெறும். (க-9)

# அழகாபுரி கிராமத்துக்கு குடி தண்ணீர்த் திட்டம்

கிளிநொச்சி, மார்ச் 4
கிளிநொச்சி அழகாபுரி கிராமம், ஆலடி கிராமம் மற்றும் மாவடி புதிய குடியிருப்பு கிராமம் ஆகியவற்றுக்கு குடிதண்ணீர் தாங்கி அமைக்க அடிக்கல் நடப்பட்டது.
வருடந்தோறும் குடிதண்ணீர்ப்பிரச்சினை ஏற்படும் கிராமங்கள் என்ற வகையில் கிராமங்களுக்கு நிலையான குடிதண்ணீர் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஏற்பாட்டில் அரசின் ஆயிரம் கிராமங்கள் திட்டத்தில் இந்த கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் காலை 10.30. மணியளவில் நீர்த்தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.
15 மில்லியன் செலவில் புழுதி ஆற்றுக் குளத்தில் இருந்து நீர் எடுத்து சுத்திகரிக்கப்பட்டு இத் தாங்கிக்கு ஏற்றி நீர் விநியோகம் இடம்பெறவுள்ளது. திட்டம் நிறைவுறும் போது இப்பகுதிக்கான குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு விடும் எனத் தெரிக்கப்பட்டது. (க-222)



## பெருந்திருவிழா

நாவாலி, மார்ச் 4
நவாலி - திருவருள்மிகு சிறி நாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் திருவிழா இடம்பெறும்.
தொடர்ந்து 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை 9.30 மணிக்குத் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சங்காபிசேகமும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் தொல்புரம் மன்னதோட்டம் ஜெகசோதி அம்பாள் ஆலய சங்காபிசேகம் நாளை காலை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
மாலை 6 மணியளவில் தண்ணுமைவேந்தன் மா.சிதம்பரநாதனின் மாணவர்களுடைய மிருதங்க அர்ப்பணிப்பு நிகழ்வும் இதில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆலய தலைவர் கி.றகுலிங் கம் தலைமையில்இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-63)

## நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இருநூறாவது நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் தந்தை செல்வா ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் மறுநாள் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் என்பதை பாடசாலையின் அதிபர் தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (எ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
பகிரங்க சேவைகள் ஓய்வுதியர் நம்பிக்கை நிதியம் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 18 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தெல்லிப்பழைப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் தலைவர் ரி.எம்.செல்வராசா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கற்றாளைகளை திருடியவர்களை மடக்கிப் பிடித்த தீவக மக்கள்

### உந்துருளியில் துரத்திச் சென்று மண்டைதீவு சந்தியில் பிடித்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் தீவகப் பகுதியில் கற்றாளைச் செடிகளை திருட்டுத்தனமாகப் பிடுங்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது அங்குள்ளவர்கள் மடக்கினர். அவற்றைத் திருட்டுத்தனமாக ஏற்றிச் சென்றனர் என்று அந்த வாகனத்தில் பயணித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சாரதியையும், மற்றொருவரையும் அங்குள்ள இளைஞர்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.




இந்தச் சம்பவம் மண்டைதீவு சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் உள்ள கற்றாளைத் தோட்டங்களுக்குள் புகுந்த தென்னிலங்கை வியாபாரிகள் அங்கிருந்த பயிர்களை திருட்டுத் தனமாகப் பிடுங்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.
அதை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் குறித்த வாகனத்தை வழிமறித்தனர். எனினும் நிற்காது தப்பியோடியது. இளைஞர்கள் அதை உந்துருளிகளில் துரத்தினர். பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். மண்டைதீவுச் சந்தியில் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் விவேகாந்த் தலைமையிலான குழுவினர் வாகனத்தை மறித்து இருவரையும் கைது செய்தனர்.
அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரும் அவர்களது வாகனத்துடன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அண்மைக்காலமாக தீவகப் பகுதியில் உள்ள கற்றாளைகள் திருடப்படுவதும் மடக்கி பிடிக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்குள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதுதவிர, வேறு தேவைகளைக் காரணம் காட்டி தீவகப் பகுதிகளுக்கு வருபவர்கள் கற்றாளைச் செடிகளை வெட்டிச் செல்கின்றனர். கரையோர பாதுகாப்புக் கருதி இந்தச் செடிகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பட்டா மற்றும் முச்சக்கர வண்டிகளில் வரும் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் கற்றாழையை வெட்டிச் செல்கின்றனர். இவ்வாறு தொடர்ச்சியாக வேலணை பிரதேசத்தின் வளங்கள் அழிக்கப்படுகின்றன என்று வேலணைப் பிரதேச சபையில் முக்கிய விடயமாகப் பேசப்பட்டது. திருட்டுத் தனமான இந்தச் செயல்களால் அங்குள்ளவர்கள்கூட இந்த வளத்தைத் தமது தேவைகளுக்குக் கூட பயன் படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும். உரிய அதிகாரிகள் மூலமாக இவற்றைத் தடை செய்வது என்று தெரிவித்து சபையில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. (த-8)



## ஞானலிங்கேச்சுரர் கோவிலில் மகா சிவராத்திரி பெருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
கருவறையில் செந்தமிழில் வழிபாடு நடைபெறும் இணுவில் அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் கோவிலிலே இன்று மகா சிவராத்திரி பெருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.
இராவணேசன் மீது அமர்ந்த ஞானலிங்கேச்சுரருக்கு அடியார்கள் நாள் முழுவதும் தங்கள் கரங்களால் நீர், பால் கொண்டு அபிடேகம் ஆற்றியும், வில்வம் முதலான மலர்கள் சாத்தியும் வழிபாடு ஆற்றலாம்.
இரண்டாம் கால வழிபாட்டினை தொடர்ந்து 1008 சிவனடியார்கள் பாற்செம்பு கொண்டு திருமஞ்சனம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## ரூ. 3 கோடி பெறுமதியான வலம்புரிச் சங்கு மீட்பு

### யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது

கொழும்பு, மார்ச் 4
யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பதுளையில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். அதன் பெறுமதி மூன்று கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. லயன் அறையிலுள்ள அரிசிப் பெட்டிக்குள் சங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)



## போதனாசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 4
வீட்டு மின் இணைப்பு, இரண்டாம் மொழிச் சிங்களம், அலங்காரப் பொருள் உற்பத்தி (சிரட்டை) போன்ற பயிற்சி நெறிகளைப் போதிப்பதற்கு தகுதி வாய்ந்த போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பதாரி வடமராட்சி பிரதேசத்துக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைச் சுயமாகத் தயாரித்து எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (எ)

# தெல்லிப்பழை மருத்துவமனையை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குக

### அதன் பணிப்பாளர் திவாகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 4
தெல்லிப்பழை மருத்துவமனையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தரத்துக்கு உயர்த்த வேண்டும் என்று தெல்லிப்பழை மருத்துவமனையின் பணிப்பாளர் யோ.திவாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
தெல்லிப்பழை மருத்துவமனையின் மருத்துவர் விடுதி, ஒட்சிசன் வழங்கும் நவீன ஆய்வு கூடம் போன்றவற்றின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது மருத்துவமனையில் கடந்த ஆண்டு 36 ஆயிரத்து 400 பேர் சிகிச்சை பெற்றனர். குறைந்த வசதிகளுடன் இயங்குகின்றபோதும் அதிகளவு நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கியுள்ளோம்.
வடக்கில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகளில் நாம் 3ஆவது இடத்தில் உள்ளோம். சிறப்பு ஆய்வுகூட வசதிகள் இன்றிக் கூட எமது மருத்துவர்கள் இருக்கும் வசதிகளைக் கொண்டு சிறந்த சேவை வழங்குகின்றனர்.
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 8 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த ஆண்டு 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். வளர்ச்சியடைந்துவரும் எமது மருத்துவமனையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தரத்துக்கு உயர்த்த வேண்டும் - என்றார்.
இந்த நிகழ்வில் வடக்கு அபிவிருத்திச் செயலணியின் செயலாளர் சிவஞானசோதி, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மாவட்ட மேலதிகச் செயலர் (காணி) முரளிதரன் வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-8)

see more news in NEWUTHAYAN.COM

## லிங்கத்தை உடைத்தோர் மீது நடவடிக்கை எடுங்கள்

### ஆறு.திருமுருகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 4

திருக்கோணேஸ்வரத்தில் சிவலிங்கப் பெருமானை உடைத்தவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய தலைவாசலில் அமைக்கப்பட்ட சைவ மக்களின் முதன்மை வழிபாட்டுச் சின்னமாகிய சிவலிங்கத்தை யார் உடைத்தார்களோ அவர்கள் மீது அரச தலைவர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்து கலாசார அமைச்சர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக உடன் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## சிமெந்து விலை அதிகரிப்பால்

# வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு 16 ஆயிரம் ரூபா மேலதிக சுமை

*யாழ்ப்பாணம், மார்ச் 4*

*வீட்டுத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், பயனாளிகளுக்கு மேலதிக சுமை ஏற்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்கு 157 சிமெந்து மூடைகள் தேவை. ஒரு சிமெந்து மூடையின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால், பயனாளிகள் 15 ஆயிரத்து 700 ரூபாவை மேலதிகமாக, தமது சொந்தப் பணத்திலிருந்து செலவிடவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.*

இலங்கை அரசின் வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 4 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கும் பணிகள் கடந்த தைப் பொங்கலுடன் ஆரம்பமாகின. ஒவ்வொரு வீடும் தலா 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன. பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாக அரசு பணம் வழங்கும். அரசின் இந்த வீட்டுத் திட்டத்தில் ஒரு வீடு கட்டுவதற்கு 157 சிமெந்து மூடைகள் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. திட்டம் ஆரம்பிக்கப்படும்போது சிமெந்து மூடையின் விலை 995 ரூபா. கடந்த மாதம் நடுப் பகுதியில் சிமெந்தின் விலை திடீரென 100 ரூபாவால் அதிகரித்துள்ளது. எதிர்பாராத இந்தத் திடீர் அதிகரிப்புக் காரணமாக ஒவ்வொரு பய்னாளியும் 15 ஆயிரத்து 700 ரூபா பணத்தை மேலதிகமாக செலவிட வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. அரசு 10 லட்சம் ரூபாவை மாத்திரமே வழங்கும் நிலையில், சந்தையில் ஏற்பட்ட திடீர் விலை அதிகரிப்புக்குரிய பணத்தை பயனாளிகள் தமது சொந்த நிதியில் செலவிட வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

**மணல்**

வீட்டுத் திட்டப் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல், யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாரவூர்திச் சங்கத்தின் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கும் நடைமுறையை மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் மணல் பொதுவாக வீடுகளின் பூச்சு வேலைகளுக்கே பயன்படுத்தப்படுகின்றது. கிளிநொச்சியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் மணலே கொங்கிறீட் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவது வழமை.

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அள்ளும் பிரதேசங்கள் வனவளத் திணைக்களத்துக்குரியவை. வனவளத் திணைக்களம் மணல் அள்ளுவதற்கான அனுமதி வழங்கலை கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதியுடன் நிறுத்தி யுள்ளது. இதனால் கிளிநொச்சி மணலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து வடமராட்சி கிழக்கிலிருந்து அதிகளவான மணலை விநியோகிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்கில் குடாரப்பு பிரதேசத்தில் மணல் திட்டி அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்த மணல் திட்டியும் வனஉயிரிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதியில் வருவதால், அதனை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், திருகோணமலை மற்றும் பொலநறுவை பிரதேசங்களிலிருந்து மகாவலி கங்கையின் இரு கரைகளிலும் அகழப்படும் மணல் வடக்குச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ.5.21)

## சிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

மகா சிவராத்திரியை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்ல வைரவர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெறும். மாலை 6 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்று நாளை செவ்வாய்க்கிழமை காலையில் சிவராத்திரி நிறைவு பூசை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 4

சிவராத்திரி விரதத்தை முன் னிட்டு யாழ்ப்பாணம் நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்குச் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெறும். அதனைவிட தீப வழிபாடு, கூட்டு வழிபாடு என்பனவும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 4

சிவராத்திரி விரதத்தை முன் னிட்டு யாழ்ப்பாணம் நிர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். தொடர்ந்து நான்கு சாம பூசைகள் இடம்பெற்று காலை தீர்த்தோற்வசம் நடைபெறும் என்று ஆலய நிர்வா கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-17)

★ ★ ★

வவுனியா, மார்ச் 4

மகா சிவராத்திரியை முன் னிட்டு வவுனியா கோவில் குளம் அருள்மிகு சிறி அகிலாண் டேஸ்வரி சமேத அகிலாண் டேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இன்று திங்கட்கிழமை காலை 6 மணி தொடக்கம் சிறப்பு அபிசேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நடைபெற்று நாளை அதிகாலை 5.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். இரவு முழுவதும் சிறப்புக் கலை நிகழ்வுகள் இடம்பெறும் என்று ஆலய அறங்காவலர்கள் அறி வித்துள்ளனர். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 4

சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் வழிபாட்டைத் தொடர்ந்து 1,008 பாற்செம்பு கொண்டு திருமஞ்சனம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பங்குபெற விரும்பும் அடியார்கள் திருக்கோவிலில் முன்பதிவு செய்துகொள்ளலாம்.

வாத்திய இசை அரங்கம், பரதநாட்டியம், வீணை இசையரங்கம் மற்றும் இணுவில் இளந்தொண்டர் சபையினரால் வழாங்கப்படும் இசைநாடகம் ஆகியன நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## பாத யாத்திரிகள் குழுவினர் கேதீஸ்வரத்தை அடைந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரிகள் குழுவினர் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை நேற்றுச் சென்றடைந்தனர்.

சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவத்திருச்சபை வருடாந்தம் இந்தப் பாத யாத்திரையை நடத்திவருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கே தீஸ்வரத்துக்கான பாதயாத்திரை நேற்று மாலை திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைந்தது. கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் கோவிலிலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை 9 நாள்கள் யாத்திரையாகச்சென்று திருக்கேதீஸ்வர ஆலயத்தை அடைந்தது. தொடர்ந்து நான்காவது வருடமாகத் தொடரும் இந்தப் பாதயாத்திரைக் குழுவினரின் யாத்திரைப் பயணத்தில் சிவலிங்கத்தை பாலாவியில் வைத்து தீர்த்தமாடி சிவராத்தரி தினமான இன்று பாலாபிசேகம் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மார்ச் 4

மகா சிவராத்திரியை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியவர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

நாளை சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு முதியவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு ஆலய தரிசனத்தில் ஈடுபடுவார்கள். தொடர்ந்து முதியவர்கள் சிவபூமி சென்று அங்குள்ள முதியோர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆன்மிகச் சுற்றுலாவின் போது 30 வரையிலான முதியவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

★ ★ ★

கிளிநொச்சி, மார்ச் 4

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செலயக பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர், பிரமந்தனாறு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஒரு தொகுதி முதியோர்கள் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று திருகோணமலை மாவட்டத்துக்கு ஆன்மீகச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

கிளிநொச்சிமாவட்டசமூகசேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில், திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படும் முதியோர்கள், கன்னியா வெந்நீர் ஊற்று, சிறி லட்சுமிநாராயணர் கோவில், திருக்கோணேச்சரம் ஆகிய திருத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திலும் சிவராத்திரி

வவுனியா.மார்ச்.4

வவுனியா வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிசிவன் ஆலயத்திலும் இம்முறை சிவராத்திரிதினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

எல்லைக் கிராமங்களில் ஒன்றான வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் எழுந்தருளியுள்ள ஆதி சிவன் ஆலயத்தில் இந்த முறை சிவராத்திரிதினத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொல்பொருள் திணைக்களம் அந்த மலையை ஆக்கிரமித்துள்ள போதும் ஆலயத்தில் சிவராத்திரி தினம் அமைதியான முறையில் பக்திபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது. எனவே சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள், மற்றும் இந்துக்களை ஆலயத்துக்கு வந்து பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் இ.தணிகாசலம் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் நேற்றைய தினம் வெடுக்குநாறி மலைக்குச் சென்றனர்.

காலை 7 மணியளவில் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்ற அவர்கள், ஆலயத்தின் பூசகர் மற்றும் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர். பூசை நிகழ்வுகளிலும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்பின்னர் புதிதாக மக்கள் மீள்குடியேறிய பகுதியான காஞ்சூர மோட்டைக்குச்சென்றதுடன் அங்குள்ள மக்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்துகொண்டனர். (எ-21,110)

# மீன்பிடித் துறைமுக அபிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குக் குழு

*யாழ்ப்பாணம், மார்ச் 4*

பருத்தித்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவது தொடர்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் இருதயராஜா தலைமையில் நகர சபை மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மீனவர் சங்கம், சமாசப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், கல்வியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. துறைமுக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க என 14 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் இருதயராஜா தெரிவித்ததாவது:

பருத்தித்துறை அமையவுள்ள துறைமுகம் தொடர்பில் ஆரம்பத்தில் பாடசாலை நிர்வாகம், அயலில் உள்ள குடும்பங்கள் மத்தியில் பல சந்தேகங்கள் எழுந்திருந்தன.

அவற்றின் அடிப்படையில் மீள்குடியேற்றச் செயலணியின் செயலார், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட இணைப்பாளர், வடக்கு மாகாணப் பிரதம செயலர், மாவட்டச் செயலர் ஆகியோர் நேரில் சென்று ஆராய்ந்து அறிக்கை தயாரித்தனர்.

பின்னர் கல்விச் சமூகத்தினரை நேரில் அழைத்துக் கலந்துரையாடி அவர்களின் சந்தேகங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. இந்த் துறைமுகம் பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு அண்மையில் அமைவதால் அங்கு எழும் ஒலியால் கற்றல் நிலைமைகள் பாதிக்கப்படலாம் என்றும், எதிர்காலத்தில் துறைமுகம் அகலிக்கப்படும்போது பாடசாலைக்கு மிக அண்மையாக நெருக்கும் நிலை காணப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்து ஏலம் கூறும் பகுதி எதிர்திசைக்கு மாற்றப்பட்டதோடு, எதிர்காலத்தில் துறைமுகம் வீதியை நெருக்காதிருக்கும் வகையிலும் திட்டமிடப்பட்டது.

வடமராட்சியில் இடம்பெற்ற உள்ளூர் அமைப்புகள் எனச் கூறிய சிலர் இந்த துறைமுகம் தொடர்பில் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால் அவர்களில் சிலர் இந்த மாவட்டத்திலேயே வசிக்காத நிலமை காணப்பட்டது. அதேவேளை பாடசாலையுடன் தொடர்புடைய ஒரு தரப்பின் இணக்கமும் பெறப்பட்டது.

துறைமுகம் அமைக்கும் சமயம் வீதியின் எதிர்த்திசையில் உள்ள வெற்று நிலத்தில் ஓர் நீரியல் பூங்கா அமைத்து அதில் வடமராட்சி மாணவர்கள் கற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதைக் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைக்க திட்ட ஏற்பாட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

இந்தப் பகுதி வளர்ச்சியடையக் கூடாது என்ற நோக்கத்துடன் கொழும்பில் உள்ள சிலர் பதிவு செய்யப்படாத அமைப்பின் ஊடாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அரச தலைவர், தலைமை அமைச்சர், ஆளுநர், நிதிப் பங்காளர் எனப் 15 பேருக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளனர். அதனாலேயே இந்தக் குழு அவசரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த துறைமுகம் கட்டாயம் அமைக்கப்படும் என்றார்.

இந்த விடயம் தொடர்பாகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடம் கேட்ட போது அவர்கள் தெரிவித்ததாவது

ஒருவரின் செயற்பாடால் திட்டத்தைக் கைவிடும் நிலமை தோன்றியுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும், அதற்கான நிதியை வழங்க வேண்டும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை அரசு கோரியுள்ளது.

இங்கே எழும் பிரச்சினைகள் தொடர்பாக உத்தியோபூர்வமாக அறிவிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு ஏற்படும். அதனால் சில சந்தர்ப்பத்தில் துறைமுகத் திட்டம் கை நழுவிப் போவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

திட்டங்களை நடைமுறைப்படுத்துவர்களோ, நிதிப் பங்காளர்களோ இந்தத் திட்டத் துக்கும் தடை ஏற்படுத்தவில்லை. என்றனர். (எ-105,26)



## 15 கிராமங்களில் வீடுகள் நாடு முழுதும் அடிக்கல்

தென்மராட்சி, மார்ச் 4

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நாடு முழுவதும் வீடமைப்புத் திட்டங்களுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 கிராமங்களில் மாதிரிக் கிராமங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் பிரதேச தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீடமைப்பு அலுவலர் ராஜேஸ்வரன், பிரிவு கிராம அலுவலர் க.கார்த்திகேயன் ஆகியோர் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்தனர்.

பிரிவில் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. முன்னர் இந்த சபை ஊடாக 5 லட்சம் ரூபாவில் வீடுகள் கட்டப்பட்டு வந்தன. இந்த வருடம் தொடக்கம் இதற்கான நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. (த-9)

## தாக்குதல் தொடர்பில் மற்றொருவரும் கைது

### வாள் மீட்டதாகவும் பொலிஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

மானிப்பாய் கல்லூரி வீதியில் கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் ஐந்து பேர்கொண்ட கும்பல் வாள், கோடரியுடன் சென்று வன்முறையில் ஈடுபட்டு உந்துருளியை கொழுத்திய குற்றச்சாட்டில் இரண்டாவது நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அவரிடம் வாள் ஒன்று மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சில நாள்களுக்கு முன்னர் தாக்குதல் மற்றும் தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. சம்பவத்துடன் தொடர்புடையவரென ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

21 வயதான அவர் சுன்னாகம் நகரில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார். வன்முறைக்குப் பயன்படுத்தப்பட்ட உந்துருளி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். சில மாதங்களுக்கு முன்னர் நவாலியில் இடம்பெற்ற வன்முறைக்குப் பழிவாங்கும் நோக்கிலேயே கல்லூரி வீதி வன்முறைச் சம்பவத்தை மேற்கொண்டதாக கைதானவர் விசாரணையில் தெரி வித்தார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

# மாற்றத்தை ஏற்படுத்தும் அபிவிருத்தியே அவசியம்

## வடக்கு அபிவிருத்திச் செயலணியின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய உதவிகளை வழங்கும் வேலைத் திட்டங்களையே நாம் முன்னெடுக்க வேண்டும். கால்நடைகளைக் கொடுத்து நிதியைச் செலவு செய்வதில் எந்தப் பயனும் இல்லை.

இவ்வாறு வடக்கு அபிவிருத்திச் செயலணியின் செயலர் சிவஞானசோதி தெரிவித்தார்.

தெல்லிப்பழை மருத்துவமனையின் மருத்துவர் விடுதி, ஒட்சிசன் வழங்கும் நவீன ஆய்வு கூடம் போன்றவற்றின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

வடக்கு மாகாணத்தில் நடைபெறும் அபிவிருத்திகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்திருந்தார். வடக்கு - கிழக்கு அபிவிருத்திக் குழுவின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அந்தக் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா உள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் அதிக நிதி ஒதுக்கீட்டில் அதிக அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. அதற்கு மாவட்டச் செயலர் நா. வேதநாயகனின் திறமையே காரணம். அவர் முதலில் நிதி ஒதுக்கீட்டைக் கேட்பார். அதன் பின்னர் வேலைத் திட்டம் தொடர்பான நிலமையை அறிக்கையிடுவார். அத்துடன் அடுத்த அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டையம் கேட்டுவிடுவார். இது பாராட்டத்தக்க விடயம்.

சில மாவட்டங்களில் வருட இறுதியில் நிதியை எவ்வாறு என்ன செய்வது என்று தெரியாது திட்டங்களில் மாற்றம் செய்து பயனின்றிச் செலவு செய்கின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு இல்லை. அபிவிருத்தியின் பெறுபேற்றைக் காணக் கூடியதாக உள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அதன் தரத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இணையாக உயர்த்த அதன் பணிப்பாளர் போராடி வருகின்றார்.

தெல்லிப்பழை மருத்துவமனையில் அனைத்துச் சிகிச்சைகளும் கிடைக்கக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். இங்கு சேர்க்கப்படுபவர்கள் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்படாத வகையில் ஆய்வுகூடங்கள், சிசிச்சைகள் அமைய வேண்டும் - என்றார். (எ-8)



## நாயன்மார்க்கட்டில் இன்று வழிபாடுகள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு நாயன்மார்கட்டு திருக்குளக்கரை விநாயகப் பெருமானுக்கு இன்று மாலை 4 மணி தொடக்கம் பொங்கலும், மாலை 6.30 மணிக்கு பூசைகளும் நடைபெறவுள்ளன.

நாயன்மார்கட்டு நாயன்மார் குரு பூசை மடத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப் பெருமானுக்கு இன்றுமாலை 6 மணி தொடக்கம் அடியவர்கள் தங்கள் கரங்களால் பால், தயிர், இளநீர் போன்றவற்றால் அபிஷேகம் செய்தும், சிவபுராண பாராயணம் செய்தும் மெய்யடியார்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து மஹா சிவராத்திரி விழாவில் கலந்துகொண்டு தங்களாலான திருத்தொண்டுகளைச் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (த-106)

# அணு விஞ்ஞான துறையினரால் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 4

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அணு விஞ்ஞான துறையினரால் யாழ்ப்பாணத்தில் கதிர் தொழில்நுட்பத்தின் பாதுகாப்பான பயன்பாடு எனும் தொனிப்பொருளில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மருத்துவமனைகளில் கடமையாற்றும் தொழில்நுட்பவியலார்களுக்கான தேசிய கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திண்ணை விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக பிராந்திய சுகாதார மருத்துவப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி உமாசங்கர், முத்துக் குமாரசாமி சர்மா கலந்துகொண்டதுடன்மதிப்புறு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் பௌதிக துறைத் தலைவர் கலாநிதி விக்ரமரூபன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வு முதன்முறையாக இலங்கையில் ஒழுங்குபடுத்தப்பட்டதை முன்னிட்டு, கொழும்பு பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளராக பணி புரியும் கலாநிதி ஜெயசிங்கம் சுதர்ஷன் இது தொடர்பில் விளக்கமளித்திருந்ததுடன், முடிவில் இணைத்து கொண்டோருக்கான பெறுமதியான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. (க)




## நீதம் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் முன்னெடுக்கும் நீதம் 7 மலர் வெளியீட்டு விழா யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர் சி.துரைராஜா முதன்மை விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நீதம் 7 நூலின் முதல் பிரதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டிருந்த உயர் நீதிமன்ற நீதியரசர் சி.துரைராஜாவுக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை நீதியரசர் ஏனையவர்களுக்கு வழங்கி வைத்தார். (ஒ.5)

# வெள்ளைவான் கடத்தலில் நாம் ஈடுபடவேயில்லை

### இப்படிச் சொல்கிறார் கோத்தபாய



**கொழும்பு, மார்ச் 4**

**போர்க்காலத்தில் வெள்ளை வான் கலாசாரத்தில் ஈடுபடவில்லையென முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை நிறைவுக்குக் கொண்டு வருவதற்குச் சில நுண்ணறிவு செயற்பாடுகளையே முன்னெடுத்தோம். இருப்பினும் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 30 ஆண்டு காலமாக நாட்டில் இடம்பெற்றிருந்த போரை முடிவுக்குக் கொண்டுவந்து, அனைத்து மக்களுக்கும் நிம்மதியான வாழ்க்கையை தற்போது ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

எதிர்காலத்தில் அமையவுள்ள எங்களது அரசில் நாட்டிலுள்ள அனைவருக்கும் மத ரீதியிலான சுதந்திரம் அதிகமாக வழங்கப்படும். நாம் இனவாதிகள் அல்ல. எந்த இனம் அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

நான் கடந்த காலங்களில் ஏதேனும் ஒரு செயற்பாட்டை செய்திருந்தால், அது எமது தனிப்பட்ட தேவைக்காக அன்றி, நாட்டின் நலனுக்காக பாதுகாப்புச் செயலர் என்ற வகையிலேயே முன்னெடுத்திருந்தேன். பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே இதனைச் செய்திருந்தேன்.

எனினும், எமக்கெதிராக பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது அனைவருக்கும் உண்மை தெரியவந்துள்ளது. நாம் இனவாதிகள் அல்ல - என்றார். (ஒ.5)

## மத்தள வானூர்தி நிலையம் இந்த வாரம் இறுதி முடிவு

கொழும்பு, மார்ச் 4

மத்தள வானூர்தி நிலையத்தின் செயற்பாடுகளை கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, இந்த வாரம் அமைச்சரவை முடிவு செய்யும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தள வானூர்தி நிலையத்தை இயக்கும் பொறுப்பை இந்தியாவின் வானூர்தி நிலையங்கள் அதிகார சபையிடம், கையளிப்பது தொடர்பான, அமைச்சரவைப் பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

இழப்பில் இயங்கி வரும், மத்தள வானூர்தி நிலையத்தை, இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து கடந்த ஆண்டு தொடக்கம், இந்தியாவுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தியது. பின்னர், இந்தப் பேச்சுக்கள் முடங்கிப் போயின.

இந்த நிலையிலேயே மத்தள வானூர்தி நிலையத்தின் செயற்பாடுகளை கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, இந்த வாரம் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ.5)

## மருத்துவமனையில் தீ விபத்து 63 லட்சம் ரூபாவும் கொள்ளை

கொழும்பு, மார்ச் 4

அனுராதபுரம் போதனா மருத்துவமனையின் நிர்வாகக் கட்டடத்தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்தின்போது, அங்கிருந்த 63 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத நபரொருவர், மருத்துவமனையின் பணப்பெட்டியை உடைத்து பணத்தைக் கொள்ளையிட்டுள்ளதாக, மருத்துவமனைப் பணிப்பாளர் துலான் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிலிருந்த சில ஆவணங்களையும் சந்தேகநபர் தீமூட்டி கொளுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் தொடர்பில் தமக்குத் தெரியவந்ததாகவும் மருத்துவமனைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## தொழில் நாடுவோர் பதிவு செய்யவும்

தொழில் நாடும் இளையோரில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ளவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பதிவு இடம்பெறும்.

தொழில் தேடுபவர்களுக்கு தொழில் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பதிவு செய்யப்படுகின்றன என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (த)

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் சஜித்தால் மாதிரிக் கிராமங்கள் விரைவில் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எதிர்வரும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மூன்று மாதிரிக் கிராமங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் யாழ்ப்பாணம் பொன்னாலையில் அமைக்கப்பட்ட பொன்னொளி நகர் மாதிரிக் கிராமத்தில் கட்டப்பட்ட 65 வீடுகளை அமைச்சர் மக்களிடம் கையளிக்கவுள்ளார். அந்த நிகழ்வில் மேலும் பல உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன என்று தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அமைக்கப்பட்ட இரண்டு மாதிரிக் கிராமங்கள் எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன. அராபி நகர் மாதிரிக் கிராமத்தில் 12 வீடுகளும், சஞ்சீவி நகர் கிராமத்தில் 20 வீடுகளுமாக மொத்தம் 32 வீடுகளை அமைச்சர் மக்களிடம் கையளிக்கவுள்ளார். அன்றைய தினம் மேலும் பல உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் சுபாஸ்கரன் தெரிவித்தார்.

'எமது வீடமைப்புத் திட்டங்கள் நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. முதற்கட்டமாக இந்த ஆண்டு இறுதிக்குள் சகல மாவட்டங்களிலுமாக 2 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிப்பது திட்டமாகும். இன்றுவரை ஆயிரத்து 700 வீடுகள் பூர்த்திசெய்யப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகளை செப்ரெம்பர் மாதத்துக்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம். ஒரு வாரத்துக்கு குறைந்தபட்சம் ஏழு மாதிரி கிராமங்கள் திறந்து வைக்கப்பட வேண்டியுள்ளன. அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட சகல மாவட்டங்களிலும் திறப்பு விழாக்களுக்காகச் செல்லவிருக்கின்றேன் என்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரனியகலையில் நடைபெற்ற வீடமைப்புத் திட்ட ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். (ஒ.521)

## பதுளையில் மர்ம மனிதன் பாதுகாப்பு வழங்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 4

ஊவா மாகாணம் பதுளை மாவட்டம் ஹாலிஎல பிரதேசத்துக்கு உட்பட்ட தோட்டங்களில் மர்ம மனிதர்கள் உலாவி வருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் இவர்கள் மக்களை பயமுறுத்தி வரும் அதேவேளை சில கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அந்த மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பித்த இந்தச் சம்பவம் தற்போது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இரவு வேளைகளில் தோட்ட இளைஞர்கள் நித்திரையின்றி காவல் காத்து வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் ஹாலிஎல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

பெண் ஒருவர் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த வேளையில் பயத்துக்கு உள்ளாகி ஓடியதில் வீழ்ந்து காயம் அடைந்ததில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன என்று இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் உடனடியாக பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

## மக்கள் முன்னணியின் பெண்கள் எழுச்சி மாநாடு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட பன்னாட்டு மகளிர் தின பெண்கள் எழுச்சி மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் இருந்து பேரிகை இசை முழங்க விருந்தினர்கள் அழைத்துவரப்பட்ட நிலையில், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களின் தூபிகளில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொடியை கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்றிவைத்தார். மண்டபத்துக்குள் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர். மாவீரர் சோதியாவின் திருவுருவப் படத்துக்கு அவரது தாயாரும் தியாகத்தாய் அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு அவரது பேர்த்தியாரும் விளக்கேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தப்பு நடனம் இசை வாத்திய இசை, நடன நிகழ்வுகள் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் நடைபெற்றதோடு கலை நிகழ்வுகளில் பங்கேற்ற கலைஞர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகத்தின் உரையைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியால் கிராமங்கள் தோறும் நடாத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான மதிப்பளிப்பும் பரிசில் வழங்கலும் நடைபெற்றது.

அதனையடுத்து ஒவ்வொரு துறையிலும் சாதனை நிலைநாட்டிய சாதனைப் பெண்களின் மதிப்பளிப்பு நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றினார். (ஒ.5.8)

# இந்தியா – இலங்கை கப்பல் சேவை திட்டமிடல்

## நிலையிலேயே இருக்கின்றது

கொழும்பு, மார்ச் 4
இந்தியா - இலங்கை இடையிலான, பயணிகள் கப்பல் சேவை இன்னமும் ஆரம்ப திட்டமிடல் நிலையிலேயே இருப்பதாக, அரசு தெரிவித்துள்ளது.

மீண்டும் படகுச்சேவையை ஆரம்பிப்பது குறித்து, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்னான்டோ, இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால், சுற்றுலாத்துறையை பெரிதும், ஊக்கவிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் இருந்து அதிகளவு சுற்றுலாப் பயணிகள், இலங்கை வரும் வாய்ப்புக் கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)



வரவு - செலவுத் திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. அதன் இறுதிக் கட்டத் தயாரிப்புப் பணிகளில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஈடுபட்டுள்ளார். தேர்தல்களை இலக்கு வைத்து சலுகைகளை வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ,5)

## சட்டத்துக்குப்...

தலமான திருகேதீஸ்வரத்தில் சிவராத்திரி நாளான இன்றைய தினத்துக்கு முதல்நாள், ஆலயத்தின் அலங்கார வளைவு கத்தோலிக்க மக்களால் இடித்தழிக்கப்பட்டது. அந்த வளைவு சட்டரீதியற்ற முறையில் வைக்கப்பட்டுள்ளதாக கத்தோலிக்க மதகுருமார்கள் தெரிவித்துள்ளனர்.

'சட்டரீதியற்ற வளைவு என்று இதனை அகற்றுபவர்கள், வடக்கில் ஏன் மன்னாரில் சட்டத்துக்குப் புறம்பாக கட்டப்பட்டுள்ள விகாரைகள், புத்தர் சிலைகளை இடித்தழிக்க ஏன் அதற்கு எதிராகக் கூடப் போராடவில்லை?' என்று இந்து மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ.5)

## திருக்கேதீஸ்வர...





மன்னார் திருகேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி விரதம் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் லட்சக்கணக்கான அடியவர்கள் ஒன்றுகூடவுள்ளனர். ஆலயத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் நந்திக் கொடி நடப்பட்டுள்ளது. ஏ32 வீதியிலிருந்து திருகேதீஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் அலங்கார வளைவு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த அலங்கார வளைவு துருப்பிடித்தி ருந்த நிலையில், அதனை மாற்றிப் புதிய வளைவு அமைக்கும் பணிகளில் ஆலயத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

புதிய வளைவு கொங்கிறீட் இடப்பட்டு நேற்று மதியம் வைக்கப்பட்டது. பி.ப. 2.45 மணியளவில் அங்கு வந்து சேர்ந்த கத்தோலிக்க மக்களால் புதிய வளைவு பிடுங்கி எறியப்பட்டு இடித்தழிக்கப்பட்டது. புதிய வளைவு முற்றாகத் துவம்சம் செய்யப்பட்டது. இதன்போது அந்தப் பகுதியில் அருட் தந்தையர்களும் நின்றுள்ளனர். அவர்கள் முன்பாகவே, நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களுமாக இணைந்து அதனை துவம்சம் செய்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் தாமதமாகவே அங்கு வந்து சேர்ந்தனர். இந்த வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியின்றி வளைவு நடுவது சட்டப்படி குற்றம். வளைவு பிடுங்கி எறியப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யுமாறு கூறிவிட்டு பொலிஸார் அங்கிருந்து அகன்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவர்கள் அந்த இடத்துக்கு வரவில்லை என்று மக்கள் குற்றம் சுமத்தினர். இடித்தழிக்கப்பட்ட வளைவு மீளவும் வைக்கப்படவில்லை.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் திருகேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்ததாவது: முன்பு அமைக்கப்பட்ட வளைவு துருப்பிடித்ததால் புதிதாக அதனை அமைக்கும் பணியில் ஈடுபட்ட போது இந்தச் செயலை செய்தார்கள். இந்த வீதியில் வளைவு அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதிக்கடிதம் உள்ளது. கிகத்தோலிக்க மக்களை நாங்கள் மதிக்கின்றோம். அவர்கள் எங்கள் உறவுகள். அவர்கள் எங்கள் கடவுளின் வளைவுகளைப் பிடுங்கிய போதும் அமைதியாக நின்றோம். இனக்கலவரத்தால் நம் தமிழ் சமூகம் பெரிய பின்னடைவையும் அழிவையும் சந்தித்தது. உறவுகளுக்குள் மதக்கலவரத்தை நாம் விரும்ப வில்லை - என்றார்கள். (ஒ.5.56.213)

## சிவராத்திரி...

வாறு மன்னார் குருமுதல்வர் விக்டர் சூசை தெரிவித்துள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் கத்தோலிக்க மக்களால் அலங்கார வளைவு இடித்தழிக்கப்பட்டது. இது இந்து மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சிவராத்திரி விரத நாளான இன்றைய தினத்துக்கு முதல் நாள் இந்தச் சம்பவம் இடம்பெற்றது இந்து மக்களை வேதனையடையவும் செய்துள்ளது.

வளைவு இடித்தழிக்கும் சம்பவத்தில் கிறிஸ்தவ அருட்தந்தையர்கள் சிலரும் நின்று மக்களை வழிநடத்தியுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில், மன்னார் மாவட்ட ஆயரை உதயன் பத்திரிகை தொடர்பு கொண்டது. 'நான் மருத்துவ சத்திரசிகிச்சைக்காக கொழும்பில் நிற்கின்றேன். மன்னாரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நான் எப்படிக் கருத்துத் தெரிவிக்க முடியும். மன்னார் குரு முதல்வரைத் தொடர்பு கொள்ளுங்கள்' என்று பதிலளித்தார்.

மன்னார் குரு முதல்வர் விக்டர் சூசையை உதயன் பத்திரிகை தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பில் கேட்டபோது;

அந்தப் பகுதியில் வளைவு சட்டத்துக்கு முரணாக அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீண்ட நாள்களாகப் பிரச்சினை நிலவுகின்றது. இன்றைய தினம் (நேற்று) நிரந்தர வளைவு அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்குள்ள கத்தோலிக்க ஆலயத்துக்கு முன்பாக இதனை அமைத்துள்ளனர். இதனை அங்குள்ள மக்கள் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தனர். அந்தப் பகுதியில் வளைவு அமைப்பது தொடர்பில் ஏற்கனவே ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டுள்ளன.

சிவராத்திரி விரதம் அமைதியாக நடைபெறவேண்டும். சிவராத்திரி முடியும் வரை, நிரந்தர வளைவு அமைப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் என்று பொலிஸாரிடம் கோரியுள்ளோம். அதற்குப் பாதுகாப்பு வழங்கவும் அவர்களிடம் கோரியுள்ளோம். அந்தப் பகுதிகளில் நந்திக் கொடி நட்டுள்ளார். அதனை நாம் ஆட்சேபிக்கவில்லை. நிரந்தர வளைவு அமைப்பது தொடர்பில் இரு தரப்பும் பேச்சு நடத்துவோம். அதற்கான காலம் இப்போதுதான் அமைந்திருக்கின்றது - என்றார்.

இதேவேளை வளைவு இடித்தழிக்கப்படும்போது சம்ப இடத்தில் நின்றதாக குற்றம் சுமத்தப்படும் வங்காலைப் பங்குத் தந்தை மார்க்ஸின் அலைபேசிக்கு உதயன் பத்திரிகை அழைப்பு எடுத்தது. அவர் பதிலளிக்கவில்லை. அவர் மீண்டும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்தார். உதயன் பத்திரிகையிலிருந்து கதைக்கின்றோம் என்று கூறியதும், தான் கூட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்து அவர் அழைப்பைத் துண்டித்தார். (ஒ.5.105.213)

## நீதிகோரி..

கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலர் இருவரும் இணைந்து கையெழுத்திட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இலங்கையில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அடக்குமுறைகள் இலங்கைத் தீவில் திட்டமிடப்பட்ட ரீதியிலான தமிழ் மக்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்பாகவே உள்ளது.

இனச் சுத்திக்ரிப்பின் உச்சமே இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இடம் பெற்ற இன அழிப்பு, போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமைச் சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள்களுக்குரிய பரிகார நீதியை பன்னாட்டுச் சமூகம் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தர நாம் விழிப்போடு மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் 2015ல் முன்மொழியப்பட்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறைக்கு ஊடாக உள்ளக பொறிமுறைகளையே இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிய நிலையிலும் ஏற்கனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் மீண்டும் கால அவகாசமே வழங்கப்படவுள்ளது. இதனை வெறும் கண்துடைப்பு நாடகமாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைக் கோரி மக்கள் எழுச்சிப் போராட்டத்தை எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை அன்று முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். நீதி கோரி இடம்பெற இருக்கும் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தமிழ் பேசும் மக்களை அலைகடலென திரண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு அழைக்கிறோம். தமிழ் மக்களை அணிதிரட்ட ஒத்துழைப்பு வழங்குமாறு பொது அமைப்புகள் மற்றும் மதகுருமாரை வேண்டிக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஒ.5)

## திருப்பதியில்...

ரமசிங்க, அவரது மனைவி மைத்திரி விக்ரமசிங்க மற்றும் அதிகாரிகள் அங்கிருந்து சிறப்பு உலங்குவானூர்தி மூலம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.35 மணியளவில் திருப்பதி வானூர்தி நிலையத்தை சென்றடைந்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவை, ஆந்திர மாநில அமைச்சர் அமர்நாத் ரெட்டி மற்றும் மாவட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர், அங்கிருந்து ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றார். திருமலையில் திருப்பதி தேவஸ்தானம் சார்பில் சிறி கிருஷ்ணா விருந்தினர் விடுதியில் அதிகாரிகள் வரவேற்றனர். நேற்றுமுன்தினம் இரவு விடுதியில் தங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை திருமலை ஏழுமலையானை தரிசித்தார். (ஒ.5,105)

## இலுப்பைக்க...

உந்துருளி மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்த யேசுதாஸை முழங்காவில் மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் சென்றபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஒ.5,21,26)

## மன்னார்...

அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் சைவத்தமிழ் மக்களுக்குத் தாங்கொணா கவலையை ஏற்படுத்தியுள்ளது.

முழுமுதற்கடவுள் சிவபெருமானின் மேன்மையான சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப் படவுள்ள நிலையில் மேற்படி சம்பவம் எமக்கு மிகுந்த மன வேதனையைத் தருகின்றது. எம்மால் தொடர்ந்தும் சர்வமத பேரவையில் இருந்து செயல்பட விருப்பமில்லாத காரணத்தால் இந்துக்குருமார் பேரவை வெளியேறுகின்றது - என்றார். (ஒ.5,213)



# டயமன்ஸ் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம். மார்ச் 4
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது. டயமன்ஸ் அணியின் சார்பில் பீமா, லக்கி, சுஜீ மூவரும் தலா ஒவ்வொரு கோலையும், மேரிஸின் சார்பில் நிதர்சன், மதி இருவரும் தலா ஒவ்வொரு கோலையும் பதிவுசெய்தனர். (ம-23)

# பெடரர் 100

22 ஆண்டுகளாக பன்னாட்டு ரென்னிஸ் அரங்கில் விளையாடிவரும் றோயர் பெடரர் 100 பன்னாட்டுக் கிண்ணங்களைக் கைப்பற்றினார்.
டுபாய் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பெடரரை எதிர்த்து கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றார் பெடரர். (ம)




## உலகக்கிண்ண இறுதியில்
# இந்தியா - இங்கிலாந்து மோதுவதற்கே வாய்ப்பு!

இங்கிலாந்தில் மே மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர்.
முக்கிய தொடர்கள் என்றாலே எந்த அணிக்குக் கிண்ணம் கிடைக்கும் என்ற கணிப்புக்களில் முன்னாள் வீரர்கள் பலரும் ஈடுபடுவார்கள். ஏ.பி.டி. வில்லியர்ஸ் தன் பங்குக்கு, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா என்று இருக்கும் அனைத்து அணிகளுக்கும் வாய்ப்பு என்று ஆரூடம்கூற நேற்றுமுன்தினம் சுனில் கவாஸ்கர், மைக்கல் கிளார்க், மத்யூ ஹைடன் தங்களது ஆரூடங்களை தெரிவித்துள்ளனர்.
'நிச்சயமாக இந்தியாஇங்கிலாந்து இடையில்தான் இறுதியாட்டம் இடம்பெறும். விராட் கோக்லிக்கு சிறந்தது என்னவெனில் டோனியின் ஆலோசனை அவருக்குக் கூடுதல் பலம். கோக்லி களத்தில் எல்லைக்கோட்டருகே களத்தடுப்பில் ஈடுபட்டு வருகிறார். ஆகவே டோனி



அவருக்கு உதவி வருகிறார். இந்திய அணியின் மிகப்பெரிய பலம் பந்து வீச்சு' என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## தென்மராட்சி வலய பாடசாலைகளின் இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 4
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய விளையாட்டுப் போட்டிகளின் மெய்வன்மைப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் நாளை தொடக்கம் எதிர்வரும் எட்டாம் திகதி வரை வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.
இறுதிப் போட்டிகள் அதே கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 9ஆம் திகதியில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ம-9)






# அலையோசை அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 4
முல்லைத்தீவு மாவட்ட 68ஆவது இராணுவ படைப்பிரிவு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது உடுப்புக்குளம் அலையோசை அணி.
புதுக்குடியிருப்பு பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதியது.
கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் அலையோசை அணி இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் அலையோசை அணி கிண்ணம் வென்றது. (ம-23-ரி3)


# றேஞ்சர்ஸ் சம்பியனானது



யாழ்ப்பாணம், மார்ச் 4
கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலைய வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.
கம்பர்மலை யங்கம்பன்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டநேர முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பங்களாதேஷை தோற்கடித்து நியூசிலாந்து அதிரடி வெற்றி!

பங்களாதேஷுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது நியூசிலாந்து அணி.



பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் கடந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூ சிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 234 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தமீம் இக்பால் 126 ஓட்டங்களையும், டாஸ் 29 ஓட்டங்களையும், மகமதுல்லா 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வாக்நெர் 5 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், போல்ட், கிரான்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி அபாரமாக விளையாடி 6 இலக்குகளை இழந்து 715 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக வில்லியம்சன் 200 ஓட்டங்களையும், லாதம் 161 ஓட்டங்களையும், ராவல் 132 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சர்க்கர், மிராஸ் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 429 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சர்க்கர் 149 ஓட்டங்களையும், மகமதுல்லா 146 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் போல்ட் 5 இலக்குகளையும், சவுத்தி 3 இலக்குகளையும், வான்நெர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)



# இங்கிலாந்து மே.இ.தீவுகள் தொடர் சம நிலையில்

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒரு நாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரை சமநிலையில் முடித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்புட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி வெறும் 113 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்லர் 23 ஓட்டங்களையும், கேல்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தோமஸ் 5 இலக்குகளை வீழ்த்தினார். அவரை விட கோல்டர், பிரீத்வைட் இருவரும் தலா 2 இலக்குகளையும், கட்ரெல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வெறும் 12.1 பந்துப்பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. கெய்ல் 77 ஓட்டங்களைக் குவித்தார். அவர் வெறும் 19 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்தத் தொடர் முழுவதும் கெய்ல் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். இதனால் அவருக்கு தொடராட்ட நாயகனுக்கான விருது வழங்கப்பட்டது.

இங்கிலாந்தில் மே மாதம் 30ஆம் திகதி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருடன் ஓய்வுபெறும் முடிவை கெய்ல் அறிவித்துள்ளார். எனினும் தற்போது அவர் உச்சக்கட்ட திறனில் (போர்மில்) உள்ளதால் அவர் தொடர்ந்து விளையாட வேண்டும் என்ற குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. இங்கிலாந்து - மேற்கிந்திய‌த் தீவுகள் இடையிலான இறுதி ஆட்டத்திலும் ரசிகர்கள் கெய்ல் ஓய்வு பெறக்கூடாது என்று வலியுறுத்தி பாதாதைகளை ஏந்தியிருந்தனர். (ம)



# டோனி இருக்க பயம் எதற்கு?

## கேதர் சுவாரஸ்யம்

மறுமுனையில் டோனி களத்தில் இருக்கும்போது அதிகம் பயப்பட வேண்டியதில்லை என்று தெரிவித்தார் கேதர் யாதவ்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் டோனி, கேதர் இருவரினதும் இன்னிங்ஸ் இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியது. இந்த நிலையில் இவ்வாறு தெரிவித்துள்ளார் கேதர் யாதவ்.

ஆஸ்திரேலியாவிலும் சமீபத்தில் இதுபோன்ற ஆட்டமொன்றில் இலக்கை விரட்டி வெற்றிபெற்றோம். மறுமுனையில் டோனி இருக்கும்போது அதிகம் கவலைப்படத் தேவையில்லை. அவரிடம் இருந்து ஏராளமான விடயங்களைக் கற்றுக்கொண்டேன் என்று கேதர் யாதவ் மேலும் தெரிவித்தார். (ம)



# ஆஸிக்கு இந்தியா பதிலடி




இந்தியாவுக்கு எதிரான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரை ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியிருந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது இந்திய அணி.

இந்த ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கவாயா 50 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 40 ஓட்டங்களையும், ஸ்ரொய்னிஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சமி, பும்ரா, குல்தீப் யாதவ் மூவரும் தலா இரு இலக்குகளையும், கேதர் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி டோனி, கேதர் யாதவ் ஆகியோரின் பொறுப்பான அரைச்சதங்களால் 10 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது. கேதர் யாதவ் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 05.03.19 செவ் 2.15 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம்: 06.03.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## முக்கிய அறிவித்தல்

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணெய் எள்ளின் விலை அதிகரிப்பால் 04.03.2019 இல் இருந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.


**ஆகக்கூடிய சில்லறை விலை**

750 ml - 700/=
350 ml - 350/=
200 ml - 220/=

(IN 9533)(4.17)

தயாரிப்பாளர்: பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9165/ 021 222 4135

## மரண அறிவித்தல்



### கனகலிங்கம் தவக்குமார்

தோற்றம் 09.04.1975 — மறைவு 03.03.2019

காரைநகரைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிட மாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான கனகலிங்கம் - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகன் தவக்குமார் கனடாவில் 03.03.2019 காலமானார்.

அன்னார் ராகினியின் அன்புக் கணவரும், கரிஸ், அனேஸ், இமேஸ், சதீஸ், அர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி, தமயந்தி, தயாளினி, தயாளகுமார், தாரணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நீதிராசா, சிவனேசன், முகுந்தன், மதிரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56,D10 உருத்திரபுரம்.

தகவல்: வே. கனகலிங்கம் (அப்பா)

077 722 1960

# சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது!



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் நடத்திய விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த துடுப்பாட்டத் தொட ரில் சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.எவி.எவி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.எவி.எவி. அணி நிர்ண யிக்கப்பட்ட 40 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெயறூபன் 39 ஓட்டங்களையும், பிரதீஸ் 33 ஓட்டங்களையும், சத்தியன், பிரதாபன் இருவரும் தலா 32 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்துவீச்சில் சென்ற லைட்ஸ் அணியின் சார்பில் அலன்ராஜ் 5 இலக்குகளையும், தசோபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 36 பந்துப்பரிமாற்றங் களில் 6 இலக்குகளை இழந்து வெற்றிபெற் றது. ஜெனோசன் அதிகபட்சமாக 48 ஓட்டங் களையும், பிரிய லக்சன் 47 ஓட்டங்களை யும் பெற்றனர். (ம-23)

## Vacancy

We need office staff for document prepaid and online Data entry. With good knowledge in computer and English. Age below 32 years. Basic Salary 19. 500/=. After 3 months 26. 500/=.
**Sun Travels and Holydays Pvt (Ltd) - Nallur, Jaffna.**
077 936 1427
(CS 23753/15/17)

கொடிபதி ஷனிதா
கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 414
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.03
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 115,509,628/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
H 05 20 30 68
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 543
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.03
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 68,558,660/-
வெற்றி இலக்கங்கள்
07 09 28 38
ஆங்கில எழுத்து N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 933
சீட்டிழுப்பு திகதி 2019.03.02 சனிக்கிழமை
E 14 22 71 73
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ராசி அதிர்ஷ்டம்
திகதி 03.03.2019 — வெற்றி வாரம் 2469 — வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 06 49 51 57
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 908, 114/=
05.03.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SAAMSON Experts in English Training
இன் 3 மாத சனி, ஞாயிறு
ஆங்கிலப் பயிற்சிநெறி 09.03.2019 சனி
1: காலை 08-10 2: மாலை 03-05
3 மாத பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே!
சான்றிதழ், அனுமதி, புத்தகங்கள் இலவசம்
ஒருபிரிவில் 16 பேர் மட்டுமே! இன்றே முன்பதிவு செய்யுங்கள்
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 021 222 4282 077 621 4567

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.O/L 6 Passes With 5 Credits including Maths.
கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
Executive Level
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.A/L 3 Passes
Certificate Course in English
18 Batches have successfully completed the Course.
Register your names
Further Details: Jaffna College Undergraduate Dept. 464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.